6 வார, வீட்டுப்பாடமற்ற வேத பாடம்

10 இலட்சத்திற்கும் மேலான பிரதிகள் விற்பனையில்

# தேவன் நம் தகப்பன் என்பதை அறிவது எப்படி?



கே. ஆர்தர், டேவிட் & பி.ஜெ. லாசன்

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா

40 நிமிட வேத பாடம்

40 நிமிட வேத பாடம்

# தேவன் நம் தகப்பன் என்பதை அறிவது எப்படி?

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா

கே. ஆர்தர், டேவிட் & பி.ஜெ. லாசன்

# HOW DO YOU KNOW GOD'S YOUR FATHER? (TAMIL)

PUBLISHED BY

**PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA**
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.
Tel.No. +91-22-65333302
E-mail - preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

Translator : Ps. P. Kanagarathinam

With permission From
WATER BROOK PRESS
12265 Oracle Boulevard, Suite 200
Colorado Springs, Colorado 80921

ISBN 978-0-307-45762-2
Copyright © 2001 by Precept Ministries International

*All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying and recording, or by any information storage and retrieval system, without the written permission of the publisher.*

Printed in India
April, 2015

Printed by :

**Ebenezer Printing House**
No. 5, 2nd Floor, Hind Service Industries,
Shivaji Park, Sea-face, Dadar (W), Mumbai 400 028.
Tel. 022 2446 2632 / 3872 E-mail:outworkeph@gmail.com

## பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா

மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுதல்

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA

THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் சொஸைட்டி ஆப் இந்தியா என்பது பிரீசெப்ட் மினிஸ்ட்ரீஸ் இன்டர்நேஷனலின் ஒரு அங்கமாகும். வேதாகமத்தை ஆழமாக கற்பதின் மூலம் மக்களை தேவனின் வார்த்தையில் நிலைநாட்டுவதில் இது ஈடுபட்டுள்ளது.

### குறிக்கோள்

தேவனுக்கு கனம் உண்டுபண்ணும் வகையில் மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டுவது.

### தரிசனம்

பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மக்கள் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் மாதிரிகளாகவும், வேதாகமத்தை ஆழமாக கற்பவர்களாகவும், வேதாகமக் கண்ணோட்டத்தில் உலகத்தை நோக்குகிறவர்களாகவும், திருச்சபைக்கு உண்மையாக ஊழியம் செய்பவர்களாகவும் வாழுதல்.

**Contact**

**PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA**

for more information about Inductive Bible Studies in your area.

Precept Ministries Society Of India
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092.
Tel.No- +91-22-65333302
E-mail - preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

## இந்த கற்கும் முறையை பயன்படுத்துவது எப்படி?

வேதம் கூறுவதை சுயமாகக் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள ஆனால் ஒன்றுகூடிவர மிகவும் குறைவான நேரமே உள்ள மக்களுக்கு இந்த சிறு-குழு கற்றல் முறை மிகவும் ஏற்றது. உதாரணத்திற்கு, வேலையில் மதிய உணவு இடைவெளியில் கூடும் குழுக்கள், அதிகாலைநேர ஆண்கள் கூடுகை, பெண்கள் வீட்டு ஜெபக்குழு கூடுகை, ஞாயிறுபள்ளி வகுப்பு, மற்றும் குடும்ப தியானவேளையில் பயன்படுத்த இது ஏற்றது. மேலும் நீண்ட நேரம் செலவிடும் சிறு குழுக்களுக்கும் – அதாவது மாலைநேர குழுக்கள், சனிக்கிழமை குழுக்கள் – ஜெபிக்கவும், ஐக்கியத்திற்கும் மற்ற நிகழ்ச்சிகளோடு, வேத பாடத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும் குழுக்களுக்கும் இந்தமுறைமை ஏற்றது

குழுவிலுள்ள அனைத்து அங்கத்தினர்களும் கூடிவரும்போதே ஒவ்வொரு பாடத்தினுடைய கற்றல் செயல்முறைகளையும் ஒரேநேரத்தில் முடிக்கும்படி இந்தப்புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு குழுவாக கற்கும் முறையாக இருந்தாலும், கற்கவும் கலந்துரையாடலை நடத்திச்செல்லவும், உங்களை வழிநடத்த ஒரு உதவியாளர் தேவைப்படுகிறார். இவரின் செயல்பாடு விரிவுரையாற்றுவதோ, போதிப்பதோ அல்ல. எனினும், இந்த புத்தகம் ஞாயிறு பள்ளி வகுப்பு மற்றும் அதைப்போல் செயல்படும் குழுக்களில் பயன்படுத்தப்படும்போது, போதிப்பவர் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வார பாடத்தோடு தன் உட்கருத்துக்களையும் நேரடியாகப் போதிக்கலாம்.

நீங்கள், உங்கள் குழுவின் உதவியாளராக, தலைவராக இருப்பின், உங்கள் வேலையை எளிதாக்க உதவிடும் குறிப்புகள்:

- நீங்கள் உங்கள் குழுவை நடத்தும் முன்பதாக பாடத்தை வாசித்து அதில் அடையாளமிடவும். இது பாடத்துடன் நன்கு அறிமுகமாக்கிக்கொள்ள உதவுவதோடு, மிக எளிமையாக குழுவை நடத்த உதவும். புத்தகத்தில் சொல்லப்பட்டபடி அடையாளக் குறியீடுகளை இடுவது குழுவை நடத்திச்செல்ல எளிதாக்கும். நீங்கள் குழுத்தலைவராயின் ஒவ்வொரு குறியீட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட வண்ணத்தை தேர்ந்தேடுக்கவும்.
- நீங்கள் குழுவை நடத்தும்போது, பாடப்பகுதியின் ஆரம்பத்திலிருந்தே அதிலுள்ளதை சத்தமாக வாசியுங்கள். பாடத்தின் முன்பு அல்லது பின்பு அல்லது இடையில் வரும் "உட்கருத்துக்களையும்" (Insight Box) பாடத்துடன் சேர்த்து வாசியுங்கள். நீங்கள் இணைந்து உற்றுநோக்கி, கற்றுக்கொண்டதை கலந்துரையாடுங்கள். வேத வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, குழுவினர் அடையாளமிடும் வார்த்தையை சத்தமாக சொல்லச்சொல்லுங்கள்.

## இந்த கற்கும் முறையை பயன்படுத்துவது எப்படி?

- கலந்துரையாடல் கேள்விகள் முழு பாடத்தையும் படித்து முடிப்பதற்கே கொடுக்கப்பட்டுள்ளது. வகுப்பு கலந்துரையாடலுக்குள் கடந்து செல்லும்போது, அநேக வேளைகளில், அவர்களே கேள்விகளை புரிந்துகொண்டு கலந்துரையாடுவார்கள். நினைவில் கொள்ளுங்கள், கலந்துரையாடல் கேள்விகள் குழுவை தலைப்பை நோக்கி நடத்திச்செல்லவே கேட்கப்படுகிறது, கலந்துரையாடலை முடிவுக்கு கொண்டுவர அல்ல.

- ஒவ்வொருவரும் தங்கள் பதில்களையும், கண்டுபிடிப்புகளையும் வாய்மொழியாக சொல்வது முக்கியமானது என்று நினைவில்கொள்ளுங்கள். இது ஒவ்வொரு வார பாடத்திட்டத்தில் அவர்களின் தனிப்பட்ட புரிந்துகொள்ளுதலை மிகவும் வலிமையாக்குகிறது. ஒவ்வொரு வார பாடத்தின் கலந்துரையாடலிலும் ஒவ்வொருவரும் பங்குபெறும்படி போதுமான அளவு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

- கலந்துரையாடல் நகர்ந்து செல்லட்டும், கற்கும்போது அவசியமான இடங்களில் சற்று நேரம் அதிகமாக செலவழிக்கலாம் என்பதே இதன் பொருள். தேவைப்பட்டால், பாடத்தை ஒரு கூட்டத்தொடருக்கும் மேலாக தொடர்ந்து எடுத்துக்கொண்டு செல்லலாம். எனினும், செல்லும் வேக அளவை மிகவும் குறைத்துவிட வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் உற்சாகம் குறைவதால் மக்கள் விட்டுவிடுகின்ற பகுதியில் நேரம் செலவிடப்படுவதைவிட, குழுவினர் எல்லாரும் “அதிகமாக விரும்பும்” பகுதிக்கு கொண்டுசெல்வதே நல்லது.

- சில பதில்கள் தகுதியானதும், சரியானதும் என்பது கேள்விக்குரியதாயிருப்பின், நீங்கள் மென்மையாகவும் மகிழ்ச்சியுடனும் குழுவினருக்கு வேதவாக்கியங்களின் சத்தியத்திற்கு நேராகவே கவனம் இருக்கும்படி நினைவுபடுத்துங்கள். உங்கள் முக்கிய நோக்கம் வேதம் என்ன சொல்கிறது என்பதை கற்றுக்கொள்வதே, மனித தத்துவங்களோடு ஒன்றிப்போவது அல்ல. உண்மையில் வேத வாக்கியங்களை வாசித்து, ஒவ்வொருவருக்கும் அவருடைய பதிலை காட்டும்படி தேவனைக் கேளுங்கள்.

# தேவன் நம் தகப்பன் என்பதை அறிவது எப்படி?

இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்தபோது சில மதத்தலைவர்களைப் பார்த்து: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்" (யோவான் 8:44) என்றார். தேவன்தான் தன்னுடைய தகப்பன் (பிதா) என்று நினைத்துக் கொண்டிருந்த மனிதர்களுக்கு இந்த வார்த்தைகள் எத்தனை மனதைப் புண்படுத்தக்கூடியதாக இருந்திருக்க வேண்டும்.

ஒரு உத்தமமான கிறிஸ்தவன் என்ன மாதிரியாகக் காணப்படுவான்? இதைக் குறித்து எப்போதாவது நீங்கள் ஆச்சரியப்பட்டதுண்டா? உங்களைக் குறித்து என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் பரலோகத்திற்குப் போகப்போகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அல்லது ஒருவர் இப்படிப்பட்ட உறுதிகொண்டவராக இருக்கிறாரா?

தேவனோடு உள்ள உறவிலே சந்தேகத்தோடு போராடிக் கொண்டிருக்கும் பலருக்கு நாங்கள் அவ்வப்போது ஆலோசனை கொடுத்துள்ளோம். இவ்வுறவைக் குறித்து எப்போதும் ஆச்சரியமடைவது, நம்பிக்கையோடு இருப்பது, ஆனால் அதைக் குறித்த நிச்சயமில்லாமல் இருப்பது ஒரு பரிதாபத்திற்குரிய வாழ்க்கையாகத்தான் இருக்கிறது. அவர்களிடத்திலே மகிழ்ச்சியில்லை, சமாதானமில்லை, உறுதியான நம்பிக்கையில்லை ஆனால் வேதனையே மிஞ்சியிருக்கிறது.

நித்திய வாழ்வு தராசிலே ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதைப் போல இருக்கிறது. நீங்கள் தேவனோடு உள்ள உறவிலே எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்பதைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமென்றால், உங்களுடைய தகப்பன் யார்? தேவனா? அல்லது பிசாசானவனா?

இந்தக் கேள்விக்குப் பதிலைத் தேடுவதற்காக நாம் 1 யோவான் புத்தகத்தை வரும் ஆறு வாரங்களில் ஆய்வு செய்யப்போகிறோம். சில நேரங்களிலே நீங்கள் அறிந்துகொள்ளும் சத்தியம் உங்களுக்கு இன்பத்தைத் தரும், சில நேரங்களில் தேவன் தம்மைத்தாமே உங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக அவருக்கு நீங்கள் நன்றி செலுத்துவீர்கள். சில நேரங்களிலே வேதாகமத்தின் உண்மைகள் உங்களுக்கு இக்கட்டான நிலையை உண்டாக்கலாம், அதுவும் மிகுந்த இக்கட்டான நிலையை உருவாக்கலாம். உண்மை அப்படித்தான் செயல்படும். அதற்காக நீங்கள் உங்களை இந்தச் சூழ்நிலையிலிருந்து தயவு செய்து விடுவித்துக்கொள்ள முயற்சிக்காதீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

# முதல் வாரம்

வேதாகமத்தின் ஐந்து புத்தகங்களை இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான யோவான் எழுதியிருக்கிறார். தேவன் நம்முடைய தகப்பன் என்பதை அறிவது எப்படி? என்ற நம் கேள்விக்குப் பதிலைச் சொல்வதற்காகவே அவைகளில் ஒரு புத்தகமான 1 யோவான் நிருபம் எழுதப்பட்டது. நம்முடைய ஆய்வைத் தொடங்குவதற்கு முன்பாக யோவான் ஏன் இந்தக் கடிதத்தை எழுதினார் என்பதைக் குறித்து அவரே சொல்வதற்கு நாம் அனுமதிப்போம்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** 3,4,5 -ம் பக்கங்களின் ஓரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் 1 யோவான் 1:1-4, 2:1-2, 26 மற்றும் 5:13 ஆகிய வேத பகுதிகளைச் சத்தமாக வாசியுங்கள்.

- 'எழுதுகிறோம்', 'எழுதுகிறேன்', 'எழுதியிருக்கிறேன்' ஆகிய வார்த்தைகளை அலைபோல் கோடிடவும். 〰〰

குழுவினர் தாங்கள் அடிக்கோடிடும் வார்த்தைகளை சத்தமாகச் சொல்லச் சொல்லவும். இப்படிச் செய்வதினால் ஒருவரும் அந்த வார்த்தைகளைக் குறிக்காமல் விடுவதில்லை. இந்த முறையை இந்த ஆய்வு முழுவதிலும் பின்பற்றுங்கள்.

## கலந்துரையாடு

- 'எழுது' என்று நீங்கள் அடையாளமிட்ட இடங்களைப் பாருங்கள். இவ்வசனங்களின் படி யோவான் ஏன் இந்த நிருபத்தை எழுதினார்? அதற்கான காரணங்களாக அவர் சொல்வது என்ன?

### 1 யோவான் 1: 1-4

1. ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.

2. அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

3. நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.

4. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்.

## 1 யோவான் 2:1-2

1. என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

2. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.

- 1 யோவான் 5:13 ன்படி யோவான் கொடுக்கும் கடைசிக் காரணம் என்ன?

- யோவானுடைய நிருபத்தை வாசிப்பவர்கள் நித்திய ஜீவன் உண்டு என்பதை அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

- நித்திய ஜீவனைக் குறித்து 1 யோவான் 5:13 உங்களுக்கு என்ன சொல்லுகிறது? நல்லவன் கெட்டவன் என்று நியாயந்தீர்க்க-தேவனுக்கு முன் பரலோகத்தில் நிற்கும்வரை நித்திய வாழ்வு பற்றி உங்களுக்குத் தெரியாது என்று பல மக்கள் சொல்லுகிறார்கள். 1 யோவான் 5:13-ன்படி இது உண்மையா?

**1 யோவான் 2:26**

உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

**1 யோவான் 5:13**

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

## 1 யோவான் 1: 1-3

1 ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.

2 அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

3 நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும் படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து வோடும் இருக்கிறது

## உற்றுநோக்கு

**தலைவர் :** திரும்பவும் 1 யோவான் 1:1-3 -ஐ வாசியுங்கள். இந்த முறை பின்வரும் குறியீடுகளைக் குறிக்கச்சொல்லவும்.

- இதன் ஆசிரியரைக் குறிக்கும் 'நாங்கள்', 'எங்கள்' என்ற இடங்களில் செவ்வக குறியீட்டினால் குறியிடவும். ▭
- ஜீவ வார்த்தை (இயேசுவைக் குறிக்கின்ற) மற்றும் அந்த அர்த்தமுடைய வார்த்தைகளைச் சிலுவைக் குறியினால் குறியிடவும். †

## கலந்துரையாடு

- நாங்கள், எங்கள் என்ற வார்த்தைகளைக் குறித்ததின் மூலம் யோவானைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக் கிறீர்கள்?

- ஜீவ வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்ததின் மூலம் நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- யோவான் இந்த நிருபத்தை பெறுநர்க்குத் தான் சொல்லுகிறார் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்? அவர்களுக்கு இந்தத் தகவல்களால் என்ன பயன்? இது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா?

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 1:5-10 வரை வசனங்களை வாசியுங்கள் குழுவினர் பின்வரும் வார்த்தைகளை சத்தமாகச் சொல்லிக் குறிக்கவும்.

- தேவனைக் குறிக்கும் (அவரில், அவர், அவரோடே உட்பட) ஒவ்வொரு வார்த்தையையும் முக்கோணத்தால் அடையாளமிடவும். △
- இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும் ஒவ்வொரு வார்த்தையையும் சிலுவையால் அடையாளமிடவும். ✝

தொடர்ந்து அந்த வேதப்பகுதியை வாசித்து பின்வருவதை அடையாளமிடவும்.

- (இருள்) (ஒளி) என்று வரக்கூடிய இடங்களில் இப்படி குறியிட்டு அடையாளமிடுங்கள்.
- பாவம் என்று வருகிற இடத்தில் 'பா' என்று குறிக்கவும்.

1 யோவான் 1:5-10 வரை மறுபடியும் வாசித்து பின்வரும் சொற்களை அடையாளமிடவும்.

- 'நாங்கள்', 'நாம்' ஆகிய சொற்களை கட்டமிடவும். ▭
- 'ஐக்கியம்' என்ற சொல்லை இப்படிக் குறியிடவும்.

### உட்கருத்து

**ஐக்கியம் என்பதற்கான கிரேக்க வார்த்தை கொய்னோனியா. இதன் பொருள் "பொதுவாக பங்கிட்டுக்கொள்ளுதல்" என்பதாகும். ஒருவர் இதற்கு இவ்வாறு விளக்கமளிக்கிறார், "ஒரே கப்பலில் இரண்டு மனிதர்கள் இருப்பதைப்போல்".**

### 1 யோவான் 1: 5-10

5 தேவன்
ஒளியாயிருக்கிறார், அவரில்
எவ்வளவேனும் இருளில்லை;
இது நாங்கள் அவரிடத்தில்
கேட்டு உங்களுக்கு
அறிவிக்கிற
விசேஷமாயிருக்கிறது.

6 நாம் அவரோடே
ஐக்கியப்பட்டவர்களென்று
சொல்லியும், இருளிலே
நடக்கிறவர்களாயிருந்தால்,
சத்தியத்தின்படி நடவாமல்
பொய் சொல்லு
கிறவர்களாயிருப்போம்.

7 அவர் ஒளியிலிருக்கிறது
போல நாமும் ஒளியிலே
நடந்தால் ஒருவரோடொருவர்
ஐக்கியப்பட்டிருப்போம்;
அவருடைய குமாரனாகிய
இயேசுகிறிஸ்துவின் இரத்தம்
சகல பாவங்களையும் நீக்கி,
நம்மைச் சுத்திகரிக்கும்.

8 நமக்குப் பாவமில்லை
யென்போமானால், நம்மை
நாமே வஞ்சிக்கிறவர்
களாயிருப்போம், சத்தியம்
நமக்குள் இராது.

9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

10 நாம் பாவஞ் செய்யவில்லையென்போமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர் களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.

## கலந்துரையாடு

- 'தேவன்' என்ற வார்த்தையைக் குறித்ததின் மூலம் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- 'ஐக்கியம்' என்ற வார்த்தையைக் குறித்ததின் மூலம் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- வசனம் 7-ன்படி நாம் ஒளியிலே நடந்தால், எந்த இரண்டு காரியங்கள் உண்மையாக இருக்கிறது?
- உங்களிடத்தில் பாவம் இருந்தால், அதை எவ்வாறு கையாளப்போகிறீர்கள்? (பாவம் என்ற இடத்தில் குறிக்கப்பட்டிருக்கும் "பா" என்ற குறியீட்டைப் பாருங்கள்.)
- நான் என் பாவங்களை அறிக்கையிட்டால் என்ன நடக்கும்? நான் என் பாவங்களை அறிக்கையிட்டால் தேவன் எனக்குச் செய்யும் இரண்டு காரியங்கள் என்னென்ன?

## உற்றுநோக்கு

தலைவர் : பாவத்தைப் பற்றி கொடுக்கப்பட்டிருக்கும் உட்கருத்து செய்தியை சத்தமாக வாசியுங்கள்.

### உட்கருத்து

**பரிசுத்த வேதாகமத்திலுள்ள பல வசனங்கள் பாவத்தைக் குறித்து நமக்கு விளக்குகின்றன.**

**பாவம் என்பது...**

- **தேவன் வைத்திருக்கும் சட்டத்தை மீறுவது**
- **இயேசுவை விசுவாசிக்க மறுப்பது**
- **நல்லது செய்ய அறிந்திருந்தும் அதைச் செய்யாமல் இருப்பது.**
- **சட்டத்தை மீறுவது (நியாயவிதிகளுக்கு அடங்காமல் இருப்பது)**
- **விசுவாசத்தில் வாழாமல் இருப்பது.**
- **நம் விருப்பம்போல் வாழ்வது.**
- **தேவன் வைத்திருக்கும் தகுதியிலிருந்து விலகிச் செல்வது.**

## கலந்துரையாடு

- ஒருவன் அல்லது ஒருத்தி தன்னை கிறிஸ்தவர் என்று சொல்லியும் இருளான வாழ்க்கை வாழ்வதையே வழக்கமாகக் கொண்டு திரிவது உங்களுக்குத் தெரியுமா? 1 யோவான் 1:5-10, இப்படிப்பட்ட மனிதரைக் குறித்து உங்களுக்கு என்னச் சொல்லுகிறது?

## மத்தேயு 5:14-16

(இயேசு சொல்கிறார்)

14. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது.

15. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத்தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

16. இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

## உற்றுநோக்கு

தேவன் ஒளியாயிருக்கிறார். அவரிடத்தில் எவ்வளவேனும் இருளில்லை. தேவன் தங்களுடைய தகப்பன் என்று சொல்லுகிறவர்கள், அவர் ஒளியில் இருக்கிறது போல தாங்களும் ஒளியில் நடக்க வேண்டும். இயேசு ஒரு பிரசங்கத்தில் ஒளியைப் பற்றிப் பேசினார் அதை நாம் மலைப் பிரசங்கத்தில் பார்க்கிறோம். நாம் முழு பிரசங்கத்தையும் படித்துப் பார்ப்பதற்கு நேரமில்லை என்றாலும் நாம் ஒளியைக் குறித்துக் கற்றுக்கொள்வதற்கு அந்தப் பிரசங்கத்தின் ஒரு சிறிய பகுதியை மட்டும் பார்ப்போம்.

தலைவர் : மத்தேயு 5:14-16 வரை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் குறியிடும் வார்த்தைகளை சத்தமாக சொல்லும்படிச் செய்யுங்கள்.

- 'ஒளியை'க் குறிப்பிடும் ஒவ்வொரு வார்த்தையையும் முன்பு செய்ததுபோல ஒரு வட்டமிடுங்கள்.
- 'நீங்கள்', 'உங்கள்' என்ற வார்த்தைகளை <u>அடிக்கோடிடுங்கள்.</u>

## கலந்துரையாடு

- 'ஒளி' என்ற வார்த்தையைக் குறித்ததின் மூலம் நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- தேவன் என்னுடைய தகப்பனாக இருந்தால், என்னவிதமான மகிமை அவருக்குக் கிடைக்கும்?

- பிறருக்கு முன்பாக எவ்வாறு நம்முடைய ஒளியைப் பிரகாசிக்கச் செய்ய முடியும்?

- நீங்கள் இன்று கற்றுக்கொண்டதிலிருந்து நாம் வாழக்கூடிய வாழ்க்கை எந்த அளவுக்கு முக்கியமானது?

- நாம் வாழும் வாழ்க்கை முறை தேவனோடு உள்ள நம் உறவை வெளிப்படுத்திக் காண்பிக்கிறதா அல்லது தேவனோடு உள்ள உறவில் விரிசல் நிலையை வெளிப்படுத்துவதாக இருக்கிறதா?

- தேவனை அறிந்திருக்கிறோம் என்று சொல்லி திருச்சபையில் அமர்ந்திருக்கிற பலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள்? தேவனோடு உத்தமமான உறவு வைத்துக்கொள்ள நீ கற்றுக் கொண்டவற்றை அவர்கள் எவ்வாறு அளக்கிறார்கள்?

- நீ அந்த உத்தமமான உறவை எப்படி அளக்கிறாய்?

## சுருக்கவுரை

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம், உயிர்தெழுதல் ஆகியவற்றை கண்ணாரக்கண்ட சாட்சிகளில் ஒருவர் இந்த யோவான். இயேசு கிறிஸ்துவின் சீடர்களில், மாணவர்களில் ஒருவருமாவார். இயேசு கிறிஸ்துவால் தெரிவு செய்யப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் அவரால் கட்டளை மற்றும் அதிகாரம் பெற்றவர். இயேசுவோடு மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவரும், தனிப்பட்ட உறவு வைத்திருந்தவருமானவரின் வார்த்தைகளை நாம் ஆய்வு செய்கிறோம். இவர் இயேசுவோடு நடந்தார். அவரோடு உணவு உண்டார், அவர் கற்றுக்கொடுத்தவைகளைக் கவனமாகக் கேட்டார். யோவானால் எழுதப்பட்ட இவ்வசனங்கள் தேவனால் உந்தப்பட்டு எழுதப்பட்டிருப்பதால் அதில் எந்தத் தவறும் இருக்காது. ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சொன்னதை நாம் கேட்டுக் கீழ்ப்படிவது மிகவும் அவசியம்.

தேவன் ஒளியாயிருக்கிறார், அவரிடத்தில் எவ்வளவேனும் இருள் இல்லை. தேவனோடு ஐக்கியம் வைத்திருக்கிறோம் என்று சொல்பவர்கள் நிச்சயமாக ஒளியில் நடக்க வேண்டும். நீங்கள் ஒளியில் நடக்கிறீர்களா? இதுதான் உங்களிடத்தில் கேட்கும் கேள்வி. ஒளியில் நடப்பது என்பது யார் நம்மைக் கவனிக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாது. உங்கள் செயல் எந்தவிதத்திலும் வெட்கத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாக இருக்காது. மக்கள் நீங்கள் செய்யும் நற்செயலைப் பார்த்து தேவனை மகிமைப்படுத்தும், மற்றும் ஒளியைப் பிரதிபலிக்கும் வாழ்க்கை வாழ்கிறீர்களா?

நமக்கு நித்திய வாழ்வு கிடைக்குமா இல்லையா என்பதைப் பற்றி நாம் அறிந்து கொள்வதற்காக அப்போஸ்தலனாகிய யோவான் இந்தக் கடிதத்தை எழுதுகிறார். இந்த கடிதத்தில் நாம் ஆராயும் ஒவ்வொன்றும் இதையே மையமாக வைக்கிறது. நீங்கள் இதை அறிந்துகொள்ள வேண்டும். அவசியம் அறிந்துகொள்ள வேண்டும், நித்திய வாழ்வு தராசிலே ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதை போல இருக்கிறது. நித்திய வாழ்வு உங்களுக்கு உண்டா? நீங்கள் ஒளியிலே நடக்கிறீர்களா?

அடுத்த வாரத்திலும் 1 யோவான் புத்தகத்தை நாம் தொடர்ந்து படிக்கப்போகிறோம். தேவனுடைய பிள்ளையின் குணநலன்களை பிசாசின் பிள்ளைகளின் குணநலன்களோடு ஒப்பிட்டுப் பார்த்து இன்னும் அதிகமாகக் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

# இரண்டாவது வாரம்

ஒளியில் நடப்பதைக் குறித்து சென்ற வாரத்தில் கற்றோம். இந்த வாரத்தில் 1 யோவான் 2-ம் அதிகாரத்தைத் தொடர்ந்து ஆராயப்போகிறோம். இதில் இன்னும் அதிகமாக ஒளியைக் குறித்தும், இருளைக் குறித்தும், தேவனை அறிந்துகொள்வது குறித்தும் மற்றும் அவருக்குள் நிலைத்திருப்பது குறித்தும் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 2:1-6 வரை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் பின்வரும் காரியங்களைச் செய்யவும்:

- 'பாவம்' மற்றும் அதைக் குறிக்கும் (பிரதிப் பெயர்) சொற்களையெல்லாம் 'பா' எனக் குறிக்கவும்.
- 'இயேசு கிறிஸ்து'வை மற்றும் அவரைக் குறிக்கும் (பிரதிப் பெயர்) சொற்களையெல்லாம் சிலுவைக் குறியினால் குறியிடவும். 

இப்போது மீண்டும் அதே வேதபகுதியை சத்தமாக வாசித்து பின் வருவதைக் குழுவினர் செய்யவும்.

- 'நிலைத்திரு' என்று வரும் இடங்களில் வீடுபோல் வரையவும். 
- 'அறிந்திருக்கிறோம்', 'அறிந்திருக்கிறேன்', 'அறிவோம்' என்ற வார்த்தைகளை 'அ' என்று குறிக்கவும்.

## கலந்துரையாடு

- வசனம் 1-ன் படி யோவான் ஏன் எழுதுகிறார்?

- இயேசுகிறிஸ்துவை குறித்து அடையாளமிட்டதில் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

### 1 யோவான் 2:1:6

1. என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

2. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்.

3. அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.

4 அவரை
அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை.

5 அவருடைய வசனத்தைக்
கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.

6 அவருக்குள்
நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன்; அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்.

## உட்கருத்து

''பரிந்துபேசுகிறவர்'' என்பவர் நமக்காக வாதாடுகிறவர். அதுமட்டுமல்ல நம் பக்கம் இருப்பவர். வழக்கறிஞர்கள் பரிந்து பேசுகிறவர்களாக சிலநேரங்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

பழைய ஏற்பாட்டில் ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனோடு மனிதன் சந்திக்கும் இடமாக இருப்பதுதான் ''கிருபாசனம்'' அல்லது பாவத்திற்கான பரிகாரம் செலுத்துமிடம். இயேசுகிறிஸ்து நமக்கான கிருபாதார பலியாக இருக்கிறார் என்று சொல்லலாம். இயேசுவினாலே தேவனை நாம் சந்திக்கிறோம், அவராலே நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரமான மன்னிப்புக் கொடுக்கப்படுகிறது.

- அறிந்திருக்கிறோம், அறிந்திருக்கிறேன் என்று அடையாளமிட்டதின் மூலம் என்ன கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்? என்ன அறிந்திருக்கிறீர்கள்? எப்படி?

## உற்றுநோக்கு

**தலைவர் :** I யோவான் 2:4-6 வரை வசனங்களை மீண்டும் வாசிக்கவும்.

- சொல்லியும் (வச.4) மற்றும் சொல்லுகிறவன் (வச.6) என்ற இடங்களில் அலைபோல் குறிக்கவும்.

## கலந்துரையாடு

- சொல்லியும் (வச.4) சொல்லுகிறவன் (வச.6) ஆகியவற்றைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

## உற்றுநோக்கு

- இதுவரை தேவனுடைய பிள்ளைகளுக்கான குணநலன்களாக ஒளியில் நடப்பதும், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதும்தான் என்று பார்த்தோம். மேலும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் ஒருவன் அவர் வாழ்ந்தவிதமாகவே வாழ வேண்டும் என்று யோவான் சொல்லுகிறார். ஆனால் இயேசு எப்படி வாழ்ந்தார்? அவர் வாழ்ந்தவிதமாகவே உண்மையில் நாமும் வாழ முடியுமா?

இந்தக் கருத்தைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதையும் பார்ப்போம்.

**தலைவர் :** யோவான் 5:19 மற்றும் 8:28 -ஐ சத்தமாக வாசியுங்கள்

- ‘இயேசு’வைக் குறிக்கும் ஒவ்வொரு வார்த்தையையும் சிலுவையால் குறியிடவும்.
- ‘செய்’, ‘செய்ய’ என்ற வார்த்தைகளை இரட்டை அடிக்கோடினால் குறியிடுங்கள்.

### யோவான் 5:19

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.

### யோவான் 8:28

ஆதலால் இயேசு அவர்களை நோக்கி : நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.

## கலந்துரையாடு

- இயேசு என்று குறித்த வார்த்தையிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

- நீங்கள் இயேசுவைப் போல வாழவிரும்புவீர்களானால் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புவீர்கள்?

## 1 யோவான் 2:9–11

9 ஒளியிலே இருக்கிறேன்
என்று சொல்லியும் தன்
சகோதரனைப் பகைக்கிறவன்
இதுவரைக்கும் இருளிலே
இருக்கிறான்.

10 தன் சகோதரனிடத்தில்
அன்பு கூருகிறவன் ஒளியிலே
நிலைகொண்டிருக்கிறான்;
அவனிடத்தில் இடறல்
ஒன்றுமில்லை.

11 தன் சகோதரனைப்
பகைக்கிறவன் இருளிலே இருந்து
இருளிலே நடக்கிறான்;
இருளானது அவன் கண்களைக்
குருடாக்கினபடியால் தான் போகும்
இடம் இன்னதென்று
அறியாதிருக்கிறான்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 2:9-11 வரை சத்தமாக வாசிக்கவும். குழுவினர் கீழ்க்கண்ட வார்த்தைகளைச் சத்தமாகச் கூறிக் குறிக்கவும்.

- முன் செய்ததுபோல ஒளி மற்றும் இருளை இப்படிக் குறியிடவும்.
- அன்பு கூருதலை இதயம்போன்றும், பகையை இப்படியும் குறியிடவும்.
- 'நிலைகொண்டு' என்பதை வீடுபோல் குறியீடவும்.

**தலைவர் :** கீழே இருக்கும் உட்கருத்தை சத்தமாக வாசியுங்கள்.

### உட்கருத்து

**புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில், நிகழ்காலத்தில்** (Present Tense) **குறிக்கப்படும் ஒரு வினைச் சொல்லானது, பொதுவாக அது தொடர்ந்து நடைபெறுவதை அல்லது வாழ்க்கையிலே நடைபெறும் ஒரு செயலைக் குறிப்பதாக பொருள்படும். கிரேக்க மொழியின் முற்றுப்பெற்ற காலத்தைக்** (Perfect Tense) **குறிக்கும் வினைச் சொல்லானது, ஏற்கனவே [கடந்த காலத்தில்] முற்றுப் பெற்றுவிட்டதைக் குறிக்கும், ஆனால் அதனால் ஏற்பட்ட விளைவானது இப்போதும்** (Present) **தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே** (Continue) **இருக்கும் என்பது பொருள்.**

**1 யோவான் 2:9 இல் 'வெறுத்தல்' என்ற கிரேக்க வார்த்தை நிகழ்காலத்தில் இருக்கிறது. ஆகையினாலே அது வெறுத்தலின் ஒரே ஒரு செயலை மட்டும் குறிப்பதில்லை மாறாக அது தொடர்ந்து நடைபெறும் ஒரு செயலாகவே இருக்கிறது.**

**1 யோவான் 2:10–ல் 'அன்புகூறுதல்' என்கிற கிரேக்க வார்த்தையும் 'வாழ்தல்' 'நிலைத்திருத்தல்' என்ற வார்த்தையைப்போல நிகழ்காலத்திலேயே இருக்கிறது.**

## கலந்துரையாடு

- இருளில் இருக்கும் ஒருவரின் குணநலன்கள் என்னென்ன?

- ஒளியில் நடக்கும் ஒருவரின் குணநலன்கள் என்னனென்ன?

- 1 யோவான் 1:5-6 வசனங்களில் தேவன் ஒளியாயிருக்கிறார் என்று நீங்கள் கற்றுக் கொண்டீர்கள். தேவனை அறிந்தவர்கள் எங்கே நடப்பார்கள்?

- அன்புக்கும் ஒளிக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

- பகைக்கும் இருளுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன?

- இந்த வேதபகுதியின்படி கிறிஸ்தவன் எவ்விதமாகக் காணப்படுகிறான்? இந்த வேதபகுதியின்படி கிறிஸ்தவன் அல்லாதவன் எவ்விதமாக காணப்படுகிறான்?

- நீங்கள் உங்களுடைய சகோதரனிடத்தில் அன்பு கூர்ந்து வாழ்கிறீர்களா?

## லூக்கா 6:31-35

31 மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

32 உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே.

33. உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே.

34. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும் படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே.

## உற்றுநோக்கு

உங்களுடைய சகோதரன் யார்? உடன் கிறிஸ்தவ விசுவாசிகளையே “கிறிஸ்துவுக்குள் சகோதரர்கள்” என்று மனதில் கொண்டு இந்தக் கடிதத்தில் யோவான் எழுதியிருக்கிறார். நித்திய ஜீவனுக்கான குணநலன்களைக் கொண்டவர்கள் தங்களுடைய உடன் விசுவாசிகளிடத்தில் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். இதனால் விசுவாச குடும்பத்தில் இல்லாத மற்றவர்களை நாம் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று பொருளா? இந்தக் கேள்விக்குப் பதிலாக இயேசு சொன்ன வார்த்தைகளைப் பின்வரும் வேதபகுதியிலிருந்து பார்ப்போம்.

**தலைவர் :** லூக்கா 6:31-35 வரை வசனங்களை சத்தமாக வாசிக்கவும். குழுவில் உள்ளவர்களை கீழ்க்கண்டவாறு செய்யச் சொல்லவும்.

- ‘சிநேகி’ என வருமிடங்களில் ♡ இதயத்தை ஏற்கனவே வரைந்ததுபோல் வரையவும்.
- ‘பாவிகளும்’ வருமிடங்களில் ‘பா’ எனக் குறிக்கவும்.
- ‘தேவன்’ என்று வருமிடங்களில் முக்கோணத்தால் குறியிடவும். △

## கலந்துரையாடு

- ‘சிநேகி’ எனக் குறித்ததிலிருந்த நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- மற்றவர்களை நாம் எப்படி நடத்த வேண்டும்?

- இந்த வசனங்களிலிருந்து தேவனைக் குறித்து என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இ ந் த வே த ப கு தி யி ன் ப டி இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவன் என்ன செய்ய வேண்டும்? யாருக்கு? ஏன்?

- நேரமிருந்தால் இந்த வாரத்தில் தேவனுடைய பிள்ளைகளைப்பற்றிக் கற்றுக்கொண்டவைகளை சுருக்கமாக எழுதுங்கள்.

- தனிப்பட்ட முறையிலே இந்த வாரத்தில் நீங்கள் கற்றுக் கொண்டவைகள் என்னென்ன?

35 உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மை செய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே.

## சுருக்கவுரை

கிறிஸ்துவுக்குள் வாழ்தல் அல்லது நிலைத்திருத்தல் என்பதின் பொருள்– அவரோடு ஒரே வீட்டில் வாழ்தல் அதாவது அவருக்குள் வாழ்தல், அவர் உங்களுக்குள் வாழ்தல் ஆகும்.

கிறிஸ்துவுக்குள் வாழ்தல் என்ற குணநலன்களில் ஒன்று அன்பாக நடத்தல் ஆகும். வேதாகமம் கூறும் அன்பானது உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டது. இதில் தேவையைச் சந்தித்தல் நடைபெறுகிறது. உடன் சகோதரன்மீது அன்பு செலுத்துதல் என்பது அவரின் தேவையைச் சந்திப்பது ஆகும். உங்களுடைய சகோதரனுக்கு என்ன தேவை இருக்கிறது. அவரை ஏற்றுக்கொள்ளுதலா? ஒரு நண்பனாக இருத்தலா? அவரைப் புரிந்துகொள்ளுதலா? வேறொருவருக்கு அன்புடனும் பரிவுடனும் புண்படாதவாறு உண்மையை எடுத்துச்சொல்வதா?

உங்களுடைய வாழ்க்கையில் தேவன் அனுமதித்திருக்கும் மக்களிடம் நீங்கள் அன்பு செலுத்துகிறீர்களா? அவர்களின் தேவைகளைச் சந்திக்கிறீர்களா? அல்லது உங்களுடைய தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்கிறீர்களா?

இயேசு என்ன செய்வார்? அவருடைய பிதா செய்கிறதாகக் காண்பதையே செய்வார். தேவன் இந்த உலகத்தில் அன்புகூர்ந்து தன்னுடைய ஒரேபேறான குமாரனை இந்த உலகத்திற்குக் கொடுத்தார். சுயநலமின்றி கொடுப்பதும் அன்பு செலுத்துவதுமே பிதாவாகிய தேவனுடைய குணாதிசயங்களாக இருக்கிறது. இது மனுஷ கொலைபாதகனாகிய பிசாசின் செயலிலிருந்து எந்தவிதத்தில் வித்தியாசமாக இருக்கிறது என்று பாருங்கள் (யோவான் 8:44)

இந்த வாரத்தில் பல காரியங்களை நாம் கற்றுக்கொண்டோம். தேவன் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக. அவருடைய அன்பிலே நீங்கள் வாழுங்கள்.

# மூன்றாவது வாரம்

சென்ற வாரத்திலே தன் சகோதரனை பகைக்கிற ஒருவன் இருளிலே நடக்கிறான் என்றும், தன் சகோதரன்மீது அன்புகூருகிறவன் ஒளியிலே நடக்கிறான் என்றும் பார்த்தோம். மற்றவர்களோடு நாம் வைத்துக்கொள்ளும் உறவைக் குறித்து தேவன் மிகவும் கவனமுள்ளவராக இருக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பதாக, "உங்கள் அயலாரை நேசிப்பது உங்களுடைய பொறுப்பு", - இப்படிக்கு தேவன், என்று கையொப்பமிட்ட ஒரு சுவரொட்டியைப் பார்த்திருப்பீர்கள். இந்த வாரத்தில் அன்புகூருவது, அறிந்துகொள்ளுவது, நிலைத்திருப்பது ஆகியவற்றைக் குறித்து இன்னும் அதிகமாக நாம் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 2:15-17 வசனங்களைச் சத்தமாக வாசிக்கவும்.

- முன் செய்ததைப்போல 'அன்பு' ♡ என வருமிடங்களில் இதயத்தை வரையுங்கள். அந்த வார்த்தை வரும் இடங்களில் எல்லாம் குழுவினர் சத்தமாகச் சொல்லிக் கொண்டே குறியிடும்படிச் செய்யுங்கள்.

## கலந்துரையாடு

- இந்தப் பகுதியில் 'அன்பு' என்கிற வார்த்தையை குறியிட்டதிலிருந்து என்ன கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்?

- இந்த வசனங்களின்படி உலகத்தின் மீது அன்புகூருதல் என்பதை என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

### 1 யோவான் 2: 15-17

15 உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

16 ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

17 உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

## ஆதியாகமம் 3:1-6

1 தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

2 ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து; நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்;

3 ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் : நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

- "மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை" (வச.16). இதன் பொருள் என்னவாக இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? கிறிஸ்துவை அறிக்கையிடுகிற பெரும்பாலானவர்களின் வாழ்க்கையில் இந்த மூன்று குணநலன்களும் இருக்கிறதா? உங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது?

- உலக ஆசை (இச்சை) யோடு நீங்கள் போராடுகிறீர்களா? எப்படி?

- இந்த வேதபகுதியின்படி என்றென்றைக்கும் நிலைத்திருப்பவன் யார்?

## உற்றுநோக்கு

பழைய ஏற்பாட்டின் ஒரு வேதபகுதி 1 யோவான் 2:16 -ஐ மிகச்சரியாக விளக்கக்கூடியதாக இருக்கிறது. நீங்கள் ஆதியாகமம் 3:1-6 வரை வாசிக்கும்போது "மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை" (தான் செய்வது குறித்த பெருமை) ஆகிய உலகத்தில் உள்ளவைகள் எல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல என்று யோவான் சொல்வதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

**தலைவர் :** 1 ஆதியாகமம் 3:1-6 வரை சத்தமாக வாசிக்கவும்.

- 'சர்ப்பம்' என்று வருகிற இடங்களில் மூன்று முள்கொண்ட கரண்டி (திரிசூலம்) போல வரையவும். 
- 'ஸ்திரீ' என வருமிடங்களில் இப்படி வரையவும். 

## கலந்துரையாடு

- ஆதாமும் தானும் செய்யக்கூடாது என்று தேவனால் சொல்லப்பட்டது என்னவென்று ஏவாள் சொன்னாள்?

- தேவனால் வேண்டாமென்று ஒதுக்கப்பட்ட மரத்தின் கனியைச் சாப்பிட ஏவாளைத் தூண்டுவதற்காக சர்ப்பம் என்ன சொன்னது?

- சர்ப்பம் ஏவாளிடம் என்ன ஆசை வார்த்தையைச் சொன்னது?

- வசனம் 6-ஐ கவனமாகப் பாருங்கள் அதில்,

"மாம்சத்தின் இச்சை",
"கண்களின் இச்சை",
"ஜீவனத்தின் பெருமை"

ஆகியவற்றிற்கு நெருங்கிய தொடர்புடைய காரியங்கள் இருக்கிறதா? அது என்ன?

ஏவாள் சர்ப்பம் சொன்னதைக் கேட்டாள். தேவன் சாப்பிடக்கூடாது என்று சொன்ன மரத்தின் கனியைப் பறித்து தன் கணவனாகிய ஆதாமுக்கும் கொடுத்தாள். அவர்கள் இருவரும் கனியைச் சாப்பிட்ட அன்று பாவம் செய்தவர்களானார்கள். அவர்களுடைய பாவத்திற்கான தண்டனை அல்லது சம்பளம் மரணம்.

4 அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை;

5 நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

6 அப்பொழுது ஸ்திரியானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்.

## வெளிப்படுத்தல் 12:9

உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.

## யோவான் 8:44

நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாத படியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

- நாம் வாழும் சமுதாயமும், உலகமும்

  "மாம்சத்தின் இச்சை"

  "கண்களின் இச்சை"

  "ஜீவனத்தின் பெருமை"

  ஆகியவற்றை எந்த வழிகளிலே ஊக்குவிக்கிறது?

## உற்றுநோக்கு

சர்ப்பம் என்பது யார் அவன் யாருக்கு ஒத்திருக்கிறான்? அவனைக்குறித்தும் அவன் குணங்களைக் குறித்தும் பின்வரும் வேதபகுதிகள் வெளிப்படுத்திக் காண்பிக்கின்றன.

**தலைவர் :** வெளிப்படுத்தல் 12:9 மற்றும் யோவான் 8:44 வரை குழுவினர் சத்தமாக வாசிக்கவும்.

- 'பிசாசு' என்று பொருள்பட வரும் இடங்களில் இப்படி ஒரு திரிசூலத்தை வரையவும். 

## கலந்துரையாடு

- இந்த வேதபகுதியிலிருந்து பழைய பாம்பாகிய பிசாசானவனைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 2:18-29 வரை சத்தமாக வாசிக்கவும்.

- 'அறிகிறோம், அறிந்து, தெரிந்து' (Know) என்ற வார்த்தைகளை **'அ'** என்று குறிக்கவும்.
- 'நிலைத்திரு' என வருமிடங்களில் வீடு போல் குறியிடவும். 
- 'அந்திக்கிறிஸ்து'வைக் குறிப்பதற்கு சிலுவையின் மீது ஒரு குறுக்குக்கோடிட்ட குறியீட்டை வரையுங்கள். 

## கலந்துரையாடு

- 'நிலைத்திரு' என்று குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்?

- வசனங்கள் 23 மற்றும் 29-ன்படி ஒரு விசுவாசியின் சிறப்பியல்புகள் என்னென்ன?

- அந்திக்கிறிஸ்துவைக் குறித்ததிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?

## 1 யோவான் 2:18-29

18 பிள்ளைகளே, இது
கடைசிக் காலமாயிருக்கிறது;
அந்திக்கிறிஸ்து வருகிறானென்று
நீங்கள் கேள்விப்பட்டபடி
இப்பொழுதும் அநேக
அந்திக்கிறிஸ்துகள்
இருக்கிறார்கள்; அதினாலே இது
கடைசிக் காலமென்று
அறிகிறோம்.

19 அவர்கள் நம்மைவிட்டுப்
பிரிந்துபோனார்கள், ஆகிலும்
அவர்கள் நம்முடையவர்களா
யிருக்கவில்லை;
நம்முடையவர்களாயிருந்தார்களா
னால் நம்முடனே
நிலைத்திருப்பார்களே; எல்லாரும்
நம்முடையவர்களல்லவென்று
வெளியாகும் படிக்கே பிரிந்து
போனார்கள்.

20. நீங்கள் பரிசுத்தராலே
அபிஷேகம் பெற்றுச்
சகலத்தையும்
அறிந்திருக்கிறீர்கள்.

21 சத்தியத்தை நீங்கள்
அறியாததினாலல்ல, நீங்கள்
சத்தியத்தை
அறிந்திருக்கிறதினாலும்,
சத்தியத்தினால் ஒரு
பொய்யுமுண்டாயிரா தென்பதை
நீங்கள் அறிந்திருக்கிறதினாலும்,
உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

22 இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.

23 குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடைய வனாயிருக்கிறான்.

24 ஆகையால் ஆதி முதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதி முதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

25 நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

26 உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

- வசனம் 19-ன்படி ஒருவர் கிறிஸ்தவர் என்று தன்னைச் சொல்லிக் கொண்டு விசுவாசத்திலிருந்து வழிவிலகி நடக்கிறார் என்றால், அவர் கிறிஸ்தவராகத்தான் தன் வாழ்க்கையைத் துவங்கினாரா? ஏன் ஒருவர் கிறிஸ்தவத்தை விட்டுப் பிரிந்து செல்கிறார்?

- நிலைத்திருப்பவர்கள் யார் யார்?

- வசனம் 26-ல் யோவான் இந்தக் கடிதத்தை எழுதுவதற்கான காரணங்களில் ஒன்றை குறிப்பிடுகிறார். ஏன் எழுதுகிறார்?

- இந்த நிருபத்தைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களை ‘அந்திக்கிறிஸ்துக்கள்’ எவ்வாறு ஏமாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள்?

● வசனம் 28-ல் யோவான் கொடுக்கும் கட்டளை என்ன? ஏன்?

● வசனம் 29-ன்படி நீங்கள் தேவனால் பிறந்தவர்கள் என்றால், தேவன் உங்களுடைய தகப்பனாக இருக்கிறார். நீங்கள் என்னவிதமான வாழ்க்கையைக் கடைப்பிடித்து நடப்பீர்கள்?

## உட்கருத்து

**நீதியாய் நடப்பது என்றால் தேவன் விரும்பும் தகுதியை, கட்டளைகளை, கற்பனைகளை – அவருடைய சித்தத்தை உறுதி செய்வதாகும். அது சரியானதைச் செய்வதாகும். "தேவனென்று உம்மை நான் மேன்மைப் படுத்துகிறேன், நீர் என்னிடத்தில் விரும்பும் வாழ்க்கையை நான் வாழ்வேன்" என்று நாம் அவரிடம் சொல்வதாகும்.**

27 நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

28 இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும் படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.

29 அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்.

## சுருக்கவுரை

உண்மையான ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் "பரிசுத்தராலே அபிஷேகம்" பண்ணப்பட்டிருக்கிறான். இதுவே நாம் சத்தியத்தை அறிந்து கொள்ளும்படி செய்கிறது. இந்த அபிஷேகம் நமக்குள் நிலைத்திருக்கிறபடியால் - தேவன் தம்மைக்குறித்து நமக்குத் போதிக்கிறார். மேலும் நாம் அவருடைய பிள்ளைகள் என்பதையும் நமக்கு உறுதி செய்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை அவருடைய ஆவியானவர் நம்முடைய ஆவியோடு இணைந்து சாட்சியிடுகிறார்.

அன்பானவரே, 1 யோவான் 2:20, 27-ல் நாம் காண்கிறபடி இந்த அபிஷேகம் உங்களுக்குள் இருந்தால் தேவனுடைய ஆவியானவர் உங்களுக்குள் இருக்கிறார், நீங்கள் தேவனைவிட்டு ஒருபோதும் பிரிந்து செல்லமாட்டீர்கள். சில நேரங்களில் வழிதவறிச் செல்லலாம், ஆனால் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருந்தால், நீங்கள் மறுபடியும் தேவனிடத்திற்குத் திரும்ப வந்துவிடுவீர்கள். ஆகையினாலே உங்கள் விசுவாச அறிக்கையை மிகவும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அவருக்குள் நீங்கள் நிலைத்திருந்தால் இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை திரும்ப வரும்போது நிச்சயமாக நீங்கள் குறைபட்டவராக காணப்படமாட்டீர்கள்.

உங்கள் வாழ்க்கையின் குணநலன்கள் என்னவாக இருக்கும்? அடுத்த வாரத்தில் நம் தகப்பனாகிய தேவன் எந்த அளவுக்கு நம்மீது அன்பு செலுத்துகிறார், மற்றும் நமக்குள் இருக்கும் அவருடைய அன்பு எவ்வாறு அவரே நம் தகப்பன் என்பதை உறுதி செய்கிறது என்பதை பார்ப்போம்.

# நான்காவது வாரம்

கடந்த வாரத்தில் தேவனுக்குள் நிலைத்திருப்பதைக் குறித்து கற்றுக் கொண்டோம். சத்தியத்தில் நீங்கள் நிலைத்திருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்குள் நீங்கள் நிலைத்திருக்கிறீர்களா? இந்த வாரத்தில் 1 யோவான் 3-ம் அதிகாரத்தை நீங்கள் படிக்கும்போது இந்த வேதபகுதிகள் உயிரோட்டமுள்ளவைகளாகும்படி பரிசுத்த ஆவியானவர் வழிநடத்த உங்களுக்காக ஜெபிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் என்கிற வாக்குத்தத்தத்தை தேவன் கொடுத்திருக்கிறார். இந்தப் பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன் இந்த வாக்குத்தத்தத்தை ஜெபத்தில் நீங்கள் ஏன் உங்களுடையதாக்கிக் கொள்ளக் கூடாது?

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 3:1-12 வரை வசனங்களை வாசியுங்கள். முன் செய்ததைப்போல குழுவினர் சத்தமாக கீழ்வரும் வார்த்தைகளைக் கூறிக் குறிக்கவும்.

- பாவம் என்று வருமிடங்களில் ‘பா’ என குறிக்கவும்.
- ‘அன்பு’ என்ற வார்த்தையைக் குறிக்க இதயத்தை வரையுங்கள். ♡

இப்போது மறுபடியும் 1 யோவான் 3:1-12 வரை மறுபடியுமாக வாசித்து குழுவினர்...

- ‘தேவனுடைய பிள்ளைகள்’ என்று வரும் இடங்களில் இப்படி வரையவும். தேவனுடைய பிள்ளைகள்.
- ‘பிசாசின் பிள்ளைகள்’ என்று வரும் இடங்களில் ஒரு அடிக்கோடிட்டு திரிசூலத்தை வரையவும். அதாவது பிசாசின் பிள்ளைகள்.
- அறிந்திருக்கிறோம், அறியவில்லை என்ற வார்த்தைகளை ‘அ’ என்று குறிக்கவும்.

### 1 யோவான் 3: 1-12

1 நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.

2 பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

3 அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்.

4 பாவஞ்செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.

5 அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை.

6 அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை.

7 பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்.

## உட்கருத்து

**1 யோவான் 3–ம் அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள காலத்தைக் குறிக்கும் வினைச்சொற்கள், தேவனுடைய பிள்ளைகளைப்பற்றியும், பிசாசின் பிள்ளைகளைப் பற்றியும் தேவன் என்ன சொல்லுகிறாரோ அதை விளக்கப் பேருதவியாக இருக்கும். இந்த வேதபகுதியில் உள்ள 'செய்கிற/வன்'** (Pratices) **என்ற வினைச்சொல் நிகழ்காலத்தைக் காட்டுகிறது. இதன் பொருள் ஒரு செயல் தொடர்ந்து நடைபெறுகிறது அல்லது அதை அவர் தன்னுடைய வாழ்க்கையில் அன்றாடம் செயல்படுத்துகிறார் என்பதாகும். அதாவது அது அவருடைய வாழ்க்கை முறையாகிவிட்டது என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.**

## கலந்துரையாடு

- நித்திய வாழ்வுக்கான என் நம்பிக்கை கிறிஸ்துவில் இருக்கிறது என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்றால், வசனம் 3–ன்படி நான் இனி என்ன செய்யப்போகிறேன்?

- தேவனுக்கு எதிராகச் செயல்படும் இந்த உலகத்தில், ஒருவர் தன் வாழ்க்கையை எவ்வாறு பரிசுத்தமாக அமைத்துக் கொள்ள முடியும்?

- வசனம் 4–ன்படி பாவம் 'செய்கிற' (நிகழ்கால வினைச்சொல்) ஒருவரைக் குறித்த உண்மையை என்னவென்று சொல்கிறது?

- 5-ம் வசனத்தின்படி இயேசு கிறிஸ்து ஏன் வெளிப்பட்டார்? அவரிடத்தில் பாவம் ஏதாகிலும் உண்டா?

- 6-ம் வசனத்தில் பாவம் என்ற சொல் இரண்டு முறை வருகிறது. அது நிகழ்காலத்தைக் குறிப்பதாகவும் இருக்கிறது. இது உங்களுக்கு என்ன சொல்கிறது?

- 6-ம் வசனத்தில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கும் 'காணவுமில்லை', 'அறியவுமில்லை' என்ற சொற்கள் கடந்த காலத்தில் நடந்து முடிந்துவிட்ட செயலைக் குறிப்பது மட்டுமல்ல அதன் தாக்கம் தொடர்ந்து முற்றுப்பெற்ற நிகழ்காலத்தை (Perfect Tense) குறிப்பதாக இருக்கிறது. இது உங்களுக்கு என்ன சொல்லுகிறது?

- வசனம் 7-ன்படி நீதியைச் செய்கிறவன் என்றால் என்ன? (இது நிகழ்காலத்தைக் குறிக்கிறது)

- நீங்கள் நீதியை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறீர்களா? நீதியாக இருப்பது என்பதை விளக்க முடியுமா?

- வசனம் 8-ன்படி பாவஞ்செய்கிறவன் (நிகழ் காலத்தைக் காட்டும் வினைச்சொல்) என்பதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?

8 பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

9 தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்.

10 இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல.

11 நாம் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது.

12 பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலை செய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினி மித்தந்தானே.

## 1 யோவான் 2:1

1 என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.

- நீங்கள் பாவம் செய்து கொண்டிருக்கிறீர்களா? பாவம் என்பது என்ன? இதற்கான விளக்கத்தை 1யோவான் 3:4-ல் பாருங்கள்.

- 9-ம் வசனத்தின்படி, தேவனால் பிறக்காத எவனும் எதற்காக தன் நேரத்தைச் செலவழிப்பான்? ஏன் அவனால் பாவம் செய்யாமல் இருக்க முடியாது? (தேவனால் பிறத்தல் என்பது முற்றுப்பெற்ற காலம் - Perfect Tense)

- 10-ம் வசனத்தின்படி, பிசாசினால் பிறந்தவர்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டும் இரண்டு குணங்கள் என்னென்ன? (10 மற்றும் 11-ம் வசனங்களில் வரும் அன்பு என்ற சொல் கிரேக்க மொழியில் நிகழ்காலத்தைக் காட்டுவதாக இருக்கிறது)

- இப்போது தேவனுடைய பிள்ளைகள் பற்றியும் பிசாசின் பிள்ளைகள் பற்றியும் நீங்கள் கற்றுக் கொண்டதை நினைவுக்குக் கொண்டுவாருங்கள்.

- ஒரு தேவனுடைய பிள்ளை பாவம் செய்யலாமா? 1 யோவான் 2:1-ஐ பாருங்கள், பாவம் என்ற வினைச்சொல் அயோரிஸ்ட் டென்ஸ் - Aorist Tense (கிரேக்க இலக்கணப்படி மீண்டும் மீண்டும்/எப்பொழுதும் என்று அர்த்தம் கொள்ளும் காலத்தில் இருக்கிறது) ஆகையினாலே இது ஒரே ஒரு பாவச் செயலைப் பற்றிச் சொல்வதாக இருக்கிறது. 1 யோவான் 3:9-ல் பாவம் நிகழ்காலத்தைக் குறிப்பதாக இருக்கிறது. இவை இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

- 1 யோவானில் சொல்லப்பட்டதின்படி, தன்னுடைய வாழ்க்கையைப்பார்க்கும் ஒருவன், தன் தகப்பன் யார் என்று எப்படிச் சொல்ல முடியும்?

## உற்றுநோக்கு

நாம் தொடர்ந்து 1 யோவான் 3 -ம் அதிகாரத்திற்குள் கடந்துசெல்வோம்.

**தலைவர் :** 1 யோவான் 3:13-18 வரை வசனங்களை வாசிக்கவும். குழுவில் உள்ளவர்கள்...

- 'அறிந்து, நிலைத்து' என்ற வார்த்தைகளை 'அ' என்று குறிப்பிடவும்.
- 'அன்பு' என்று வருமிடங்களில் இருதயம் போலவும், 'பகை' என்கிற இடத்தில் இப்படியுமாகக்  குறியிடுங்கள்.

### உட்கருத்து

**1 யோவானில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள அன்பு என்ற சொல்லின் கிரேக்க வார்த்தை 'அகாபே' (மற்றும் இதன் அடிச்சொல்லிலிருந்து தோன்றிய வார்த்தைகள்.) இந்த அன்பைப் பெற எவ்வித தகுதியும் அடிப்படையாகத் தேவையில்லை. இந்த அன்பானது மற்றவரின் நலனில் மிகவும் அதிக அக்கறை கொண்டதாகும். இந்த அன்பைச் சம்பாதிக்க முடியாது. எந்தத் தகுதியும் இல்லாமல் இருந்தாலும் அவரிடத்திலும் இந்த அன்பு தாராளமாகக் காட்டப்படும்.**

## கலந்துரையாடு

- 14-ம் வசனத்தின்படி நாம் மரணத்திலிருந்து நீங்கி ஜீவனுக்குள் நுழைந்திருக்கிறோம் என்று எவ்வாறு அறிகிறோம்?

### 1 யோவான் 3: 13-18

13 என் சகோதரரே, உலகம்
உங்களைப் பகைத்தால்
ஆச்சரியப்படாதிருங்கள்.

14 நாம் சகோதரரிடத்தில்
அன்பு கூருகிறபடியால்,
மரணத்தைவிட்டு நீங்கி
ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று
அறிந்திருக்கிறோம்;
சகோதரனிடத்தில் அன்பு
கூராதவன் மரணத்திலே
நிலைகொண்டிருக்கிறான்.

15 தன் சகோதரனைப்
பகைக்கிற எவனும் மனுஷ
கொலைபாதகனாயிருக்கிறான்;
மனுஷ கொலைபாதகனெவனோ
அவனுக்குள் நித்திய ஜீவன்
நிலைத்திராது என்று அறிவீர்கள்.

16 அவர் தம்முடைய
ஜீவனை நமக்காகக்
கொடுத்ததினாலே அன்பு
இன்னதென்று
அறிந்திருக்கிறோம்; நாமும்
சகோதரருக்காக ஜீவனைக்
கொடுக்கக்
கடனாளிகளாயிருக்கிறோம்.

17 ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிற தெப்படி?

18 என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்.

- மற்றவரிடத்தில் நீங்கள் அன்பு காட்டுகிறீர்கள் என்பதை எப்படி வெளிப்படுத்துவீர்கள்? 'அன்பை' குறித்திருக்கும் இடங்களைப் பாருங்கள். இந்த அன்பு தேவனுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமானால், ஒருவரிடத்தில் நாம் அன்பு காட்டுவதற்கான நடைமுறை வழிகள் சில என்னென்ன?

- வசனம் 14-ன்படி நீங்கள் அன்பு கூறவில்லையென்றால் எதில் நிலைத்திருக்கிறீர்கள்?

- வசனம் 15-ன்படி நீங்கள் பகைக்கிறவர்களாக இருந்தால் நித்திய ஜீவன் உங்களிடத்தில் நிலைத்திருக்குமா? ஏன்?

- யோவான் அன்புக்கும் பகைக்கும் இடைப்பட்ட ஒன்றைச் சொல்லுகிறாரா? ஒருவரை வெறுக்காமல் ஆனால் அதே நேரத்தில் அவரை நீங்கள் தவிர்க்க முடியுமா? "நான் அவரை நேசிக்கிறேன், அவரிடத்தில் எனக்கு எந்த எந்த வேலையுமில்லை'' என்று நீங்கள் நேர்மையான மனதோடு சொல்ல முடியுமா? இப்படிச் சொல்வது வசனம் 18-க்கு எவ்வாறு தொடர்புடையதாக இருக்கிறது?

## உற்றுநோக்கு

இப்போது இதிலுள்ள இன்னும் சில வசனங்களைப் பார்ப்போம்.

**தலைவர் :** 1 யோவான் 3:19-24 வரை வசனங்களைச் சத்தமாக வாசியுங்கள். குழுவினர்...

- 'அறிந்து' என்ற வார்த்தைகளை 'அ' என்று குறிப்பிடவும் 
- 'அன்பு' என்று வருகிற இடத்தில் இப்படிக் குறியிடவும். 

## கலந்துரையாடு

- 19-ம் வசனத்தில் "இதினாலே நாம் நம்மை..." என்று வரும் வார்த்தைகளை எவ்வாறு 17 மற்றும் 18 வசனங்களோடு தொடர்புபடுத்துவீர்கள்?

- இப்படிப்பட்ட அன்பு நம்முடைய இருதயங்களில் என்ன உறுதியைக் கொண்டுவரும்?

- 23-ம் வசனத்தின்படி எந்த இரண்டு கட்டளைகளை நம் ஆண்டவர் நம்மிடத்தில் விட்டுச் சென்றிருக்கிறார்?

### 1 யோவான் 3:19-24

19 இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

20 நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்.

21 பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங் கொண்டிருந்து

22 அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்.

23 நாம் அவருடைய
குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின்
நாமத்தின்மேல்
விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக்
கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர்
அன்பாயிருக்க வேண்டுமென்பதே
அவருடைய
கற்பனையாயிருக்கிறது

24 அவருடைய
கட்டளைகளைக்
கைக்கொள்ளுகிறவன் அவரில்
நிலைத்திருக்கிறான், அவரும்
அவனில் நிலைத்திருக்கிறார்; அவர்
நம்மில் நிலைத்திருக்கிறதை அவர்
நமக்குத்தந்தருளின ஆவியினாலே
அறிந்திருக்கிறோம்.

- வசனம் 24-ல் 'நிலைத்து' என்ற வார்த்தையைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?

- இந்த வாரத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட அனைத்திலுமிருந்து ஒரு உண்மையான தேவனுடைய பிள்ளையின் சிறப்புக்குணங்கள் என்னென்ன?

## சுருக்கவுரை

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? இந்தக் கேள்வியைக் குறித்து எண்ணிக்கைக்கு அதிகமான குழப்பங்கள் உலகத்தில் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை நாம் கற்றுக் கொண்டதிலிருந்து வேதவாக்கியங்களில் எந்த குழப்பமும் இல்லை என்பதை நாம் காண்கிறோம். ஒரு விசுவாசியிடம் உள்ள குணநலன்களையும் ஒரு அவிசுவாசியிடம் உள்ள குணநலன்களையும் எளிதாகக் கண்டுணரமுடியும்.

நீங்கள் உங்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? தேவன் உங்களுடைய பிதாவா? உங்களுடைய குடும்பத்தைப்பற்றி, உங்களுடைய நண்பர்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? வேதாகமம் ஏற்கனவே நியாயந்தீர்த்துள்ளது. ஆனால் இந்த உலகம் "நீங்கள் என்னை நியாயந்தீர்க்காதீர்கள்" என்று அலறுகிறது. அன்பு, கீழ்ப்படிதல், அவரில் நிலைத்திருத்தல், தேவனை அறிதல் ஆகியவை ஒரு தேவனுடைய பிள்ளையின் வெளிப்படையாகத் தெரியக்கூடிய அடையாளங்களாகும். இதில் குழப்பமடையத் தேவையில்லை. உண்மை வெளிப்படையாக, எளிதாகத் தெரிந்துகொள்ளும்படியாக இருக்கிறது.

வேதவாக்கியங்களும் பரிசுத்த ஆவியானவரும் நீ தேவனுடைய பிள்ளையாக இல்லை என்பதை தெரிவித்திருக்கலாம். இப்போதே உன் வாழ்க்கையை அவரிடம் நீ ஏன் கொடுக்கக்கூடாது? அவர் உன்னை மிகவும் நேசிக்கிறார். நீ எங்கே இருக்கிறாயோ அங்கேயே உன்னைச் சந்திக்க விரும்புகிறார். பிறகு அவர் உன்னை முற்றிலும் மாற்றுவார். நீ இதுவரை அனுபவித்திராத அன்பினால் உன்னை அவர் நிரப்புவார். நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்கள் என்ற உண்மையை அவரிடத்தில் அறிக்கையிட்டு, அதற்காக வருந்தி, உங்கள் இருதயத்தை மாற்றும்படி தேவனிடத்தில் ஜெபியுங்கள். இப்போதே அவரை முழுமையாகப் பின்பற்ற விரும்புவீர்கள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நீதியுள்ள வாழ்க்கை வாழ்வீர்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை அவரிடம் கொடுத்தால் நீங்கள் எப்போதும்போல இருக்க முடியாது. அவரிடத்தில் உங்களை அர்ப்பணித்ததற்காக எப்போதும் வருத்தப்பட மாட்டீர்கள். மேலும் உங்களுடைய தகப்பன் யார் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். இந்த உலகமும்கூட அறிந்துகொள்ளும், ஏனென்றால் நீங்கள் வாழும் வாழ்க்கை, சிந்தனை, செயல், மற்றும் பேச்சுக்கள் அனைத்திலும் அவரைப்போல அதிகம் அதிகமாக காணப்பட ஆரம்பிப்பீர்கள்.

## ஐந்தாவது வாரம்

கடந்த வாரத்தில் அன்பு, பகை, தேவனை அறிதல், அவர் நம்மில் வாழ்கிறார் என்பதைப் பற்றியெல்லாம் தேவனுடைய வார்த்தை சொல்வதை நம்முடைய (சொந்த) அனுபவத்தில் பார்த்தோம். அது மிகவும் அற்புதமான படிப்பாக இருந்தது. ஆனால் யோவான் அன்பைப் பற்றியும், அறிந்துகொள்ளுதலைப் பற்றியும், அவரில் நிலைத்திருப்பதைப் பற்றியும் இன்னும் சொல்லி இருக்கிறார். இந்த வாரத்தில் நம்முடைய பரமபிதாவுக்கு அன்பு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை உங்களுக்கு நீங்களே அறிந்துகொள்வீர்கள். 1 யோவான் 4-ம் அதிகாரத்தில் மட்டும் அன்பைப் பற்றி 20-ம் அதிகமான முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## உற்றுநோக்கு

அன்பைக்குறித்து தேவன் சொல்வதை நாம் காண்பதற்கு முன்பதாக ஆவிகளை - அது தேவனால் உண்டானதா இல்லையா என்பதை எப்படிச் சோதித்தறிய வேண்டும் என்று அறிவது அவசியமாகும். இந்தக் கடிதத்தில் யோவான், இயேசுவை விசுவாசிக்கும் மக்களை ஏமாற்ற அந்திக்கிறிஸ்துகளும், பல நபர்களும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம் என்பதை நினைவுபடுத்திப்பாருங்கள்.

**தலைவர் :** 1 யோவான் 4:1-6 வரை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் பின்வருவதை அடையாளமிடவும்.

- 'ஆவி' மற்றும் ஆவி எனப் பொருள்படும் சொற்கள் யாவற்றையும் மேகம்போன்று குறியிடுங்கள்.



- 'அறியலாம்', 'அறிந்தவன்', 'அந்திருக்கிறோம்', என்ற வார்த்தைகளை **'அ'** என்று குறிக்கவும்.

### 1 யோவான் 4: 1-6

1 பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.

2 தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.

3 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது.

4 பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.

5 அவர்கள் உலகத்துக் குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.

6 நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.

## கலந்துரையாடு

- நீங்கள் 'ஆவி' என்று குறியிட்டபோது அது ஒரே ஒரு ஆவியை மட்டும் குறிப்பதாக இருந்ததா? எவ்விதமான முரண்பாட்டை நீங்கள் கண்டீர்கள்?

## உற்றுநோக்கு

**தலைவர் :** தேவனிடத்திலிருந்து வராத ஆவியைக் குறிக்கும் ஒவ்வொரு குறிப்பையும் ஒரு குறுக்குக் கோட்டால் குழுவினர் அடையாளமிடவும். /

## கலந்துரையாடு

- இரண்டுவித வித்தியாசமான ஆவிகளைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இந்த வேத பகுதியிலிருந்து ஒரு கள்ள தீர்க்கதரிசியை நீங்கள் அறிந்து கொள்வதற்கான வழிகளில் ஒன்று என்ன?

- வசனம் 4-ன்படி யார் பெரியவர்?

- மறுபடியும் வசனம் 4-ஐ பாருங்கள். நான் அவருடைய பிள்ளையாக இருந்தால், தேவன் எங்கு வாழ்கிறார்?

- அறிந்து, அறிந்திருக்கிறோம் என்ற வார்த்தைகளைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 4:7-11 வரை வசனங்களை சத்தமாக வாசிக்கவும். குழுவினர் பின்வரும் வார்த்தைகளைக் குறிக்கவும்.

- 'அன்பு' என்று வரும் இடங்களில் இருதயம்போல் வரையவும். 
- 'தேவன்' என்று பொருள்பட வரும் இடங்களில் முக்கோணமிடவும். 

## கலந்துரையாடு

- இந்த வசனங்களில் தேவன் எவ்வாறு விவரிக்கப்படுகிறார்?
- வசனம் 9,11-ல் தேவனுடைய அன்பு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது?
- 'அன்பு' என்று குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?
- அன்பைக் குறித்த இந்த உண்மைகளை அறிவதினால் தனிப்பட்ட ஒருவருக்கு அது எந்த விதத்தில் உதவும்?
- வசனம் 7 மற்றும் 8-ன்படி,
  நாம் யாரிடத்தில் அன்பு செலுத்த வேண்டும்?
  அன்பு எங்கிருந்து வருகிறது?
  அன்பு செலுத்துகிற ஒவ்வொருவரையும் பற்றிய உண்மை என்ன?
  அன்பு செலுத்தாத ஒருவரைப்பற்றிய உண்மை என்ன?

### 1 யோவான் 4:7-11

7 பிரியமானவர்களே,
ஒருவரிலொருவர்
அன்பாயிருக்கக் கடவோம்;
ஏனெனில் அன்பு தேவனால்
உண்டாயிருக்கிறது; அன்புள்ள
எவனும் தேவனால் பிறந்து,
அவரை அறிந்திருக்கிறான்.

8 அன்பில்லாதவன்
தேவனை அறியான்; தேவன்
அன்பாகவே இருக்கிறார்.

9 தம்முடைய ஒரேபேறான
குமாரனாலே நாம் பிழைக்கும்
படிக்குத் தேவன் அவரை
இவ்வுலகத்திலே
அனுப்பினதினால் தேவன் நம்
மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

10 நாம் தேவனிடத்தில்
அன்பு கூர்ந்ததினால் அல்ல,
அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து,
நம்முடைய பாவங்களை நிவிர்த்தி
செய்கிற கிருபாதாரபலியாகத்
தம்முடைய குமாரனை
அனுப்பினதினாலே அன்பு
உண்டாயிருக்கிறது.

11 பிரியமானவர்களே,
தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில்
அன்புகூர்ந்திருக்க, நாமும்
ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக்
கடனாளிகளாயிருக்கிறோம்.

## 1 யோவான் 4:12-21

12 தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.

13 அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.

14 பிதாவானவர் குமாரனை உலக ரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்.

15 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.

16 தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

## உற்றுநோக்கு

**தலைவர் :** 1 யோவான் 4:12-21 வரை வசனங்களை சத்தமாக வாசியுங்கள். குழுவினர் ...

- 'நிலைத்து' என பொருள்பட வருமிடங்களில் வீடு போல் வரையவும்.
- 'அறிந்து, அறிந்திருக்கிறோம்', என்று வருமிடங்களில் **அ** என்று குறியிடவும்.
- 'அன்பு' என்று வருமிடங்களில் இருதயம்போல் குறிக்கவும்.

## கலந்துரையாடு

- 'நிலைத்து' என்ற வார்த்தையைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?
- நான் தேவனிடத்தில் அன்பு கூறுகிறேனென்று சொல்லியும் என் சகோதரனை வெறுத்தால் வசனம் 20-ன்படி நான் எப்படிப்பட்ட மனிதன்?
- தேவன் நம்மை அதிகமாக நேசிக்கிறார் என்றால், நாம் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் இதைச் செய்கிறீர்களா?
- 13 மற்றும் 16-ம் வசனங்களில் வரும் அறிந்திருக்கிறோம், அறிந்து என்ற வார்த்தையைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- அன்பைப்பற்றிக் குறிப்பாக நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- நாம் ஏன் அன்பு செலுத்த வேண்டும்?

## உற்றுநோக்கு

இந்த வேதபகுதியிலிருந்து தேவனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும்?

**தலைவர் :** I யோவான் 4:12-21 வரை சத்தமாக மறுபடியும் வாசியுங்கள்.

- இம்முறை தேவன் என்று பொருள்பட வரும் இடங்களில் ஒரு முக்கோணமிடவும். △

## கலந்துரையாடு

- தேவனைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்? 12-ம் வசனம் தொடங்கி இந்த வேத பகுதியில் தேவனைக் குறித்து நீங்கள் என்னென்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கலந்துரையாடுங்கள்.

17 நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறது; ஏனென்றால், அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.

18 அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

19 அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.

20 தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?

21 தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்.

## யோவான் 3:16

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

- இந்த வேதபகுதியின்படி தேவனுடைய பிள்ளையின் குணநலன்கள் என்னென்ன? இதற்கு முன் செய்ததைப்போல 12-ம் வசனத்திலிருந்து ஒவ்வொரு வசனத்தையும் தனித்தனியாக கலந்துரையாடுங்கள்.

## உற்றுநோக்கு

தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் நம்முடைய உடன் சகோதரர்களிடத்திலும் மற்றும் நம் எதிரிகளிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். ஆனால் தேவன் எந்த அளவுக்கு நம்மீது அன்பு செலுத்துகிறார்? இந்த வேதபகுதிகளைப் பார்ப்போம்.

**தலைவர் :** யோவன் 3:16 மற்றும் ரோமர் 5:6-8 வரை சத்தமாக வாசியுங்கள். நீங்கள் வாசிக்கும்போது குழுவினர் பின்வரும் வார்த்தைகளைக் குறிக்கவும்.

- 'தேவன்' என்று வரும் இடங்களில் முக்கோணம் வரையவும். △
- 'கிறிஸ்து' என்று வரும் இடங்களில் சிலுவையை வரையவும். ✝

## கலந்துரையாடு

- தேவன் இந்த உலகத்தின் மீது வைத்துள்ள அன்பை உறுதிசெய்ய என்ன செய்தார்?

- கிறிஸ்து நமக்காக எப்போது மரித்தார்?

- கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதை சொந்தமாக்கிக் கொள்ள நாம் என்ன செய்தோம்?

- தேவன் என்ற வார்த்தையைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- கிறிஸ்து என்ற வார்த்தையைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- தேவன் எந்த அளவுக்கு உங்கள் மீது அன்புகூருகிறார்?

- இது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தருகிறதா? நீங்கள் நினைத்ததிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறதா? இது உங்களை எப்படி உணரும்படி செய்கிறது?

- இந்த அறிவு மற்றவர்களை நீங்கள் நேசிக்க வேண்டும் என்ற விருப்பத்திற்கான தாக்கத்தை எப்படி உண்டுபண்ணும்? இந்த அன்பு தானாகவே எப்படி வெளிப்படும்?

## ரோமர் 5:6-8

6 அன்றியும், நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்

7 நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது, நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.

8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

## சுருக்கவுரை

தேவன் எந்த அளவுக்கு உங்களை நேசிக்கிறார் என்பதையும், உங்களைச் சுற்றியுள்ள உலகத்திற்கு எந்த அளவுக்கு நீங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்கிற அவருடைய எண்ணத்தையும் குறித்த சுருக்கத்தை நீங்கள் பெற்றிட ஆரம்பித்துள்ளீர்களா? அன்பை செயல்படுத்திக்காட்ட வேண்டும் - அதாவது தேவன் தன் அன்பை வெளிப்படுத்தியதைப்போல வெளிப்படுத்த வேண்டும். தேவன் ஒரு உயர்ந்த பரிசை அளித்திருக்கிறார். அது தன்னுடைய ஒரே பேரான குமாரனையே இந்த உலகத்திற்கு தந்திருக்கிறார். நீ அவருடைய எதிரியாக இருந்தும்கூட அவர் உன்னை அதிகமாக நேசிக்கிறார், கிறிஸ்து இயேசு உனக்காக மரித்தார்.

ஆகவே, இப்போது இயேசு கிறிஸ்து நமக்குள் இருப்பதால் நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம் என்பதினாலே, நாம் நம்முடைய சகோதரனிடத்திலும் நம்முடைய அயலானிடத்திலும், நம்முடைய எதிரியினிடத்திலும் அன்புகூருவது மிகுந்த சிரமமான காரியமா? நம் அன்பை வெளிப்படுத்துவதின் மூலம் நாம் யாருடைய பிள்ளைகள் என்பதை நாம் சொல்ல முடியும்.

அருமையான நண்பரே, கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், அவர் ஒளியிலே நடந்து செல்லுங்கள், அவர் அன்பிலே நடந்து செல்லுங்கள்.

# ஆறாவது வாரம்

இந்தக் கடைசி வாரத்தில், 1 யோவான் –ல் ஐந்தாவதும் இறுதியுமான அதிகாரத்தை இணைந்து படிப்போம். தேவன் உங்கள் பிதா என்பதை நீங்கள் அறிந்துகொள்வதற்கு உள்ள இன்னும் சில வழிகளை ஒரு முறை ஆராய்வோம்.

## உற்றுநோக்கு

ஐந்தாம் அதிகாரத்தில் உள்ள முதல் ஐந்து வசனங்களிலிருந்து நாம் தொடங்குவோம்.

**தலைவர் :** 1 யோவான் 5:1-5 வரை சத்தமாக வாசிக்கவும். நீங்கள் வாசிக்கும்போது குழுவினர் பின்வரும் வார்த்தைகளை குறிக்கச் சொல்லவும்.

- 'அன்பு' என்று வருமிடங்களில் இருதயத்தை வரையவும்.
- 'அறிந்து' என வருமிடங்களில் **'அ'** என குறிக்கவும்.
- 'ஜெயிக்கும், ஜெயிக்கிற' என்று வருகிற இடத்தில் ஒரு அரைவட்டம் வரைந்து இப்படி அம்புக்குறியிடவும்.
- 'தேவனால் பிறந்த, அவரால் பிறப்பிக்கப்பட்ட' என்ற இடங்களில் இப்படி ஒரு அரைவட்டத்தை வரையுங்கள்.

### 1 யோவான் 5: 1-5

1 இயேசுவானவரே
கிறிஸ்து என்று விசுவாசிக்கிற
எவனும் தேவனால்
பிறந்திருக்கிறான்;
பிறப்பித்தவரிடத்தில் அன்பு
கூருகிற எவனும் அவரால்
பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும்
அன்பு கூருகிறான்.

2 நாம் தேவனிடத்தில்
அன்புகூர்ந்து அவருடைய
கற்பனைகளைக்
கைக்கொள்ளும் போது,
தேவனுடைய பிள்ளைகளிடத்தில்
அன்பு கூருகிறோமென்று அறிந்து
கொள்ளுகிறோம்.

3 நாம் தேவனுடைய
கற்பனைகளைக்
கைக்கொள்வதே அவரிடத்தில்
அன்பு கூருவதாம்; அவருடைய
கற்பனைகள்
பாரமானவைகளுமல்ல.

## கலந்துரையாடு

- வசனம் 1–ன்படி தேவனால் பிறந்த ஒரு தேவனுடைய பிள்ளையின் இரண்டு சிறப்புக் குணங்கள் என்னென்ன?

4 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

5 இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

- வசனம் 4, 5-ல் 'ஜெயிக்கும்' என்று குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்? இதை அன்றாட வாழ்க்கையில் வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

- அப்படி ஒருவேளை வாழ்ந்துகாட்டத் தவறிவீட்டீர்களென்றால், யார் உலகத்தை வெற்றி கொள்பவராக இருக்கிறான்?

- நீங்கள் உலகத்தை ஜெயித்திருக்கிறீர்களா? அல்லது இந்த உலகம் உங்களை ஜெயித்திருக்கின்றதா? உலகம் உங்களை ஜெயித்திருக்குமென்றால் தேவனிடத்தில் உங்களுடைய நிலை என்ன? நீங்கள் அவருடைய பிள்ளையாக இருக்கிறீர்களா அல்லது இல்லையா?

- இந்த ஐந்து வசனங்களின்படி தேவனால் பிறந்த, தேவனை தன்னுடைய தகப்பனாகக் கொண்டிருக்கிற ஒரு நபரைப் பற்றிய உண்மை என்ன?

## உற்றுநோக்கு

இப்போது 1 யோவான் 5:6-12 வசனங்களைப் பார்ப்போம். இந்த வசனங்கள் புரிந்துகொள்ள இயலாத இறையியல் கருத்தைக் கொண்டதாக இருந்தாலும், சற்று ஆழமாக ஆராய்ந்து நம் தகப்பன் யார் என்பதை அறிந்துகொள்ள அவைகள் என்ன சொல்லுகின்றன என்று பார்ப்போம்.

**தலைவர் :** 1 யோவான் 5:6-12 வரை வாசிக்கவும்.

- இயேசு கிறிஸ்து என்று பொருள்பட வருகிற இடத்தில் சிலுவையை வரையவும்.
- சாட்சி, சாட்சியிடுகிற என்று வரும் இடங்களில் ஒரு செவ்வகம் வரையவும்.

## கலந்துரையாடு

- சாட்சி, சாட்சியிடுகிற என்று குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?

- பரிசுத்த ஆவியானவர் மற்றும் தேவன் எதற்குச் சாட்சியாக இருக்கிறார்கள்? அல்லது எதைக் குறித்துச் சாட்சியாக இருக்கிறார்கள்?

### 1 யோவான் 5: 6-12

6 இயேசுகிறிஸ்துவாகிய
இவரே ஜலத்தினாலும்
இரத்தத்தினாலும் வந்தவர்;
ஜலத்தினாலே மாத்திரமல்ல,
ஜலத்தினாலும் இரத்தத்தினாலும்
வந்தவர். ஆவியானவர்
சத்தியமாகையால்,
ஆவியானவரே சாட்சி
கொடுக்கிறவர்.

7 (பரலோகத்திலே
சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா,
வார்த்தை, பரிசுத்த ஆவி
என்பவர்களே, இம்மூவரும்
ஒன்றாயிருக்கிறார்கள்;)

8 பூலோகத்திலே
சாட்சியிடுகிறவைகள் மூன்று,
ஆவி, ஜலம், இரத்தம்
என்பவைகளே, இம்மூன்றும்
ஒருமைப்பட்டிருக்கிறது.

9 நாம் மனுஷருடைய
சாட்சியை ஏற்றுக் கொண்டால்
அதைப்பார்க்கிலும் தேவனுடைய
சாட்சி அதிகமாயிருக்கிறது;
தேவன் தமது குமாரனைக்
குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே.

10 தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரைப் பொய்யராக்குகிறான்.

11 தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.

12 குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

- வசனம் 10 இன்படி தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் தனக்குள்ளே என்ன கொண்டிருக்கிறான்?

- வசனம் 7-ன்படி பரிசுத்த ஆவியானவர் சாட்சியிடுகிறார். ஆகையால் ஒரு விசுவாசியின் உள்ளே இருப்பது யார்?

- இந்த வேதபகுதியில் தேவனுடைய பிள்ளையின் எந்த குணநலன் (தன்மை) வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது?

- இயேசு கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

- இந்த வேத பகுதியிலிருந்து உங்களைப்பற்றி நீங்கள் என்ன கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?

## உற்றுநோக்கு

**தலைவர்:** 1 யோவான் 5:13-21 வரை வசனங்களை வாசிக்கவும். குழுவினர் பின்வரும் வார்த்தைகளை குறிக்கவும்.

- அறிந்திருக்கிறோம், அறியவும் என்று பொருள்பட வரும் இடங்களில் 'அ' என்று குறியிடவும்.
- 'பாவம்' என்று வரும் இடங்களில் 'பா' என்று குறிக்கவும்.
- 'நித்திய ஜீவன்' என்று வருமிடங்களில் அடிக்கோடிடவும்.

## கலந்துரையாடு

- அறிந்திருக்கிறோம், அறியவும் என்ற வார்த்தையைக் குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?
- 'நித்திய ஜீவன்' என்று குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? இது எவ்வாறு 1 யோவான் 5:11-12-க்குத் தொடர்புடையதாக அல்லது இணையாக இருக்கிறது.
- நித்திய ஜீவன் உங்களுக்கு உண்டு என்று எவ்வாறு நீங்கள் அறிந்துகொள்ள முடியும்?
- கடந்த ஆறுவாரங்களில் ஒரு தேவனுடைய பிள்ளைக்கான சில குண நலன்களாக நாம் கண்டது என்ன?
- பாவம் என்று குறியிட்டதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

### 1 யோவான் 5:13-21

13 உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.

14 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.

15 நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.

16 மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக் கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக் குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்.

17 அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு.

18 தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.

19 நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்.

- 14,15-ம் வசனங்கள் ஜெபத்தைக் குறித்து உங்களுக்கு என்ன கற்றுக்கொடுக்கிறது?

- 1 யோவானை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் படித்ததின் விளைவாக தேவன் ஏன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்க வேண்டும்?

## உட்கருத்து

**வசனம் 16 மற்றும் 17-ல் "மரணத்துக்கு ஏதுவான பாவம் செய்தல்" என்பதைக் குறித்த விளக்கம் இறையியல் அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒன்று தெளிவாக இருக்கிறது, அது ஒரு சகோதரன் பாவத்தில் இருப்பதை நான் கண்டால் அவனுக்காக நான் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் எந்தப் பாவம் அவனை "மரணத்துக்கு ஏதுவாக்கும்" என்று நமக்குத் தெரியாது, ஆகையால் ஒவ்வொரு முறையும் ஒரு சகோதரன் பாவம் செய்யக்கண்டால் நாம் அவன் விடுதலைக்காக ஜெபிக்க வேண்டும்.**

- வசனம் 18-ன்படி ஒரு தேவனுடைய பிள்ளைக்கான குணநலன்கள் என்னென்ன?

- நான் தேவனுக்குச் சொந்தமானவனாக இருந்தால் யார் என்னை பாவம் செய்யாதபடி தடுக்க முடியும்? (பாவம் செய்யாமலிருப்பதற்கான வல்லமை, பாவத்தில் தொடர்ந்து வாழாத வாழ்க்கை)

- இப்போது மறுபடியும் வசனம் 13-ஐ பாருங்கள். இந்தக் காரியங்களையெல்லாம் யோவான் ஏன் எழுதினார்?

- அன்பானவரே, உங்களுக்கு நித்திய ஜீவன் இருக்கிறதா? இல்லை என்றால், அது எனக்கு வேண்டும் தேவனே என்று அவரிடம் சொல்லுங்கள். அதற்கு நீங்கள் இந்த உலகத்தின் ஆசை இச்சைகள், பாவங்களை விட்டு தேவனிடம் திரும்பி அவற்றிலிருந்து விடுதலைபெற வேண்டும். உங்களை நீதிமானாக்கும்படி அவரிடம் கேளுங்கள். அவரால் செய்யமுடியும். மேலும் உங்களுடைய விசுவாசமே இந்த உலகத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

20 அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.

21 பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்

## சுருக்கவுரை

ஒரு தேவனுடைய பிள்ளையின் குணநலன்கள் என்னென்ன? இதைக் குறித்து நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறீர்கள், ஆனால் இப்போது உங்களிடம் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

- பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?
- தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?
- பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய வாழ்க்கையில் இருக்கிறாரா?
- உங்களுடைய சகோதரரை, அயலாரை, எதிரிகளை நேசிக்கிறீர்களா?

நீங்கள் இவற்றையெல்லாம் செய்கிறீர்கள் என்றால், 1 யோவான் நிருபத்தின் அடிப்படையில் தேவன் உங்களுடைய தகப்பன் என்பதை நீங்கள் அறிய முடியும். இவைகள் எல்லாம் உங்களுடைய வாழ்க்கையில் உண்மை இல்லை என்றால், உங்களுடைய தகப்பன் யாராக இருக்க முடியும்?

நீங்கள் ஒரு குழுவாக, அமைதியாக ஏன் ஜெபத்தில் நேரத்தைச் செலவிடக்கூடாது? இந்தக் கூட்டத்தில் நீங்கள் தேவன் உங்களுடைய தகப்பனாக இருக்க, அவருடைய குடும்பத்தில் புதிதாகப் பிறக்க, உங்கள் பாவத்திலிருந்து மன்னிப்படைந்து, நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள விரும்பலாம். அப்படியானால் நீங்கள், உங்கள் பாவத்திற்காக வருந்துவதாக தேவனிடம் சொல்லுங்கள், மன்னிக்க வேண்டுங்கள். நீங்கள் உங்கள் சிந்தனையை மாற்றி இயேசுகிறிஸ்துவை விசுவாசியுங்கள். அவரை உங்களுடைய மீட்பராக, ஆண்டவராக, தேவனாக ஏற்றுக்கொள்ளுங்கள். தேவன் சொல்லுகிறார், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் (யோவான் 1:12)

இப்போதும், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அவருடைய வார்த்தையை கற்றுக்கொள்வதற்கான வாஞ்சையையும் உங்களுக்குத் தருவாராக. வாழ்வளிக்கும் ஜீவ அப்பத்தைப் பெற்றிட பசியையும், அந்த பசியில்லாத நாட்களிலும் கூட தேவனுடைய வார்த்தையை அனுதினமும் கற்றுக்கொள்ள ஓர் ஒழுங்கு முறைக்கான விருப்பத்தையும் தந்தருவாராக!

## ஆசிரியர் மற்றும் இந்த ஊழியங்களைக் குறித்து

கே ஆர்தர் ஒரு சர்வதேச வேத போதகராக, ஆசிரியராக, கருத்தரங்கு பேச்சாளராக உலக முழுவதிலும் அறியப்பட்டுள்ளார். மேலும் 'பிரீசெப்ட் ஃபார் லைப்' என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலக முழவதிலும் சந்தித்துள்ளார். நான்கு முறை 'தங்க பதக்க விருதின்' ஆசிரியராகவும், 100 -க்கும் மேற்பட்ட புத்தககங்கள் , மற்றும் வேத பாடங்களுக்கு ஆசிரியராகவும் உள்ளார்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனல் (PMI), 1970 -ல் கே மற்றும் அவர் கணவர் ஜேக் என்பவர்களால் சாட்டனூகா, டென்னிஸியி -ல் மக்களை தேவனுடைய வார்த்தையில் நிலைநாட்டவேண்டும் என்ற தரிசனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த ஊழியம் உலகமுழவதும் சென்று அடைந்துள்ளது. இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகுழுக்களை அமெரிக்கா முழுவதும் கொண்டுள்ளது. PMI ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்து மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டு கொள்ள பயிற்றுவித்துள்ளது.

டேவிட் மற்றும் பி.ஜெ லாசன், பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இன்டர்நேஷனலில் 1980 முதல் பணியாற்றி வருகிறார்கள். ஒன்பது வருட மேய்ப்பர் பணிக்குப்பின்பு PMI -ல் முழநேரமாக மாணவர் ஊழியங்களின் இயக்குனராகவும், அதிலுள்ள ஊழியர்களுக்கு பயிற்றுநராகவும் உள்ளார்கள். PMI கருத்தரங்குகள் மற்றும் 'கட்டளையின் மேல் கட்டளை ' (PUP) வீடியோவில் சிறப்பு பேச்சாளராகவும், PUP, NIIS மற்றும் 40 நிமிட வேதபாடங்கள் தொடரிலும் டேவிட் எழுதுகிறார். BJ எண்ணற்ற 40 நிமிட வேத பாடங்களில் எழுதியும், இத்தொடர்களின் தலைமை பதிப்பாளராகவும், முன்னேற்ற பணியிலும் உள்ளார். இதனுடன் PMI-ன் பெண்கள் கருத்தரங்குகளில் சிறப்புப் பேச்சாளராகவும் உள்ளார்.

உங்கள் பகுதியில் வேதத்தை பகுத்தாராயும் (Inductive Bible Study) பயிற்சிகளுக்கான கூடுதல் விவரங்களுக்கு பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் சொசைட்டி ஆப் இந்தியா -ஐ தொடர்புகொள்ளவும்.


**Precept Ministries Society of India**
P.O.Box 7707, Borivali (West), Mumbai – 400092, India
Tel.No: +91-22-65333302
E-mail: preceptindia@rediffmail.com
Website: www.preceptindia.org

# No-Homework Bible Studies

## That Help You Discover Truth For Yourself

40 MINUTE BIBLE STUDIES




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***

***For Product Catalogue & Orders contact***
***preceptindia@rediffmail.com | www.preceptindia.org***

40 MINUTE BIBLE STUDIES

# No-Homework
## That Help You




***Available in Hindi also (shortly available in Tamil, Telugu & Malayalam)***




***Available in Hindi also (shortly available in Tamil, Telugu & Malayalam)***




***Available in Hindi, Malayalam and Telugu also (shortly available in Tamil)***




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***




***(shortly available in Hindi, Tamil, Telugu & Malayalam)***












# Bible Studies

## Discover Truth For Yourself




*Available in Hindi, Tamil, Kannada & Bengali also (shortly available in Telugu and Malayalam)*




*Available in Hindi and Malayalam also (shortly available in Tamil & Telugu)*




*Available in Hindi and Malayalam also (shortly available in Tamil & Telugu)*



















***For Product Catalogue & Orders contact***
***preceptindia@rediffmail.com | www.preceptindia.org***

# Other powerful study series

## New Inductive Study Series

This powerful series contains 13-week long studies and is ideal for personal study, small groups, Sunday school classes, family devotions and discipling others.

*Available in Hindi also*







*Available in Hindi also*

*Available in Hindi also*







## Devotional & Study Tools




*Available in Hindi also*









# The Lord Series

The Lord series provides insightful, warm-hearted Bible studies designed to meet you where you are - and help you discover God's answers to your deepest needs.










***Available in Hindi, Malayalam, Telugu, Tamil & Kannada also***




# Bible Study for Kids

The Discover 4 Yourself Inductive Bible Studies for Kids help you find out for Yourself what the Bible is all about – and give you exciting ways to do it!













***For Product Catalogue & Orders contact***
***preceptindia@rediffmail.com | www.preceptindia.org***



## நீங்கள் பரலோகத்துக்கு செல்வீர்கள் என்ற நிச்சயம் உடையவராயிருப்பது எப்படி?

நித்தியத்தை மக்கள் எங்கு செலவிடுவார்கள் என்று வரும்போது, அநேக மக்கள் பரலோகத்தில் ஒரு இடத்தை அவர்கள் பெறுவார்கள் என்று நம்புகிறார்கள், மற்றவர்கள் அவர்களுடைய இடத்தைக் குறித்து அது பாதுகாப்பானது என்று ஊகிக்கிறார்கள்.

எதிர்காலத்தைக் குறித்து எண்ணுவதோ, ஊகிப்பதையோ காட்டிலும், தேவனுடன் எங்கு நிற்பீர்கள் என்று 1 யோவான் புத்தகத்தில் நீங்கள் தெளிவான பதிலைப் பெறக்கூடும். இருளில் நடக்காமல் ஒளியில் நடத்தல் என்ன என்பதையும் - ஒருவர் தேவனுக்குரியவரா அல்லது பிசாசுக்குரிய குணங்கள் உடையவரா என்பதை ஒருவருடைய வாழ்க்கை முறையே வெளிப்படுத்தும் என்பதையும் நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்.

இந்த ஒளியூட்டும் பாடம் தேவன் உங்கள் தகப்பன் என்றும் பரலோகம் உங்கள் வீடு என்பதையும் அறிய - உங்களை நம்பிக்கை, சமாதானம், மற்றும் சந்தோஷம் இவைகளுக்கு நேராக சந்தேகமில்லாமல் நடத்தும்.

40 நிமிட வேத பாடம்

### ஒரு வாரத்தில் 40 நிமிடங்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடும்!

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இண்டர்நேஷனல் குழுவினரின் இந்த 40 நிமிட வேதபாட தொடரானது, உங்களை முக்கியமான தலைப்புகளில் ஊக்கத்துடன் செயல்படவைக்கிறது. இந்த பகுத்தாராயும் முறை வழிகாட்டியானது, வீட்டுப்பாடங்கள் இல்லாமல் வெறும் ஆறு 40 நிமிடங்களில் பாடங்களை முடிக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது, நீங்களாகவே ஆராயும்படி தேவன் என்ன சொல்லுகிறார் மற்றும் எப்படி உங்களின் இன்றைய வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடும் என்றும் உங்களுக்கு உதவிடுகிறது. புத்தகத்தின் வலதுபுறத்தில் அதன் குறிப்பிட்ட வேத வசனங்களுடன் நடத்துபவரின் குறிப்புகளும் உள்ளது, சுயமாகக் கற்கும் ஒவ்வொரு பாடங்களும் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் சிறுகுழு கலந்துரையாடலுக்கும் ஒரு வல்லமையான மூலாதாரமாகும்.

பிரீசெப்ட் மினிஸ்டிரீஸ் இண்டர்நேஷனல், 1970-ல் ஜேக் மற்றும் கே ஆர்தரால் ஆரம்பிக்கப்பட்டது, இலட்சக்கணக்கான மக்கள் தேவனுடைய சத்தியத்தை சுயமாகவே கண்டுகொள்ள பயிற்றுவித்துள்ளார்கள். **Precepts for Life** என்ற ரேடியோ மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் 94 மில்லியன் பார்வையாளர்களை உலகம் முழுவதும் சந்தித்துள்ளார்கள். இதனுடன் வேதத்தை பகுத்தாராயும் பயிற்சி பயிலரங்குகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குழுக்கள் அமெரிக்கா முழுதும் கொண்டுள்ளது. **PMI** ஏறக்குறைய 150 நாடுகளில் வேதத்தை பகுத்தாராயும் பாடங்களை 70 மொழிகளில் மொழியாக்கம் செய்துள்ளது.

PRECEPT MINISTRIES SOCIETY OF INDIA
THE INDUCTIVE BIBLE STUDY PEOPLE

Rs 150

E-mail : preceptindia@rediffmail.com
Website : www.preceptindia.org